மாலை 48 மணி 7 ஜுலை 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



ஸ்ரீ
ஆண்டாள்
ஆடிப்பூரத்
திருத்தேர்





# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,

## இருக்கன்குடி.

சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

## ஆடிப்பெருந்திருவிழா அழைப்பிதழ்

''நாயகி நான்முகி நாரா யணி நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்(று)
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே''
-அபராமி அந்தாதி

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு வைப்பாறும், அர்ச்சுனா நதியும் சேரும் இடத்தில் அன்னை மாரியம்மன் புதைந்து இருந்த இடத்தில் சாணம் சேகரிக்கச் சென்ற பெண்களில் பூசாரிப் பெண் அவ்விடத்தில் கூடையை வைக்க, மீண்டும் கூடையை எடுக்க முடியாத நிலையில் அவளுக்கு அருள் வந்து, ''நான் மாரி, இங்கு புதைந்துள்ளேன் என்னை எடுத்து தொழுபவர்களுக்கு நல்வரம் அளிப்பேன்'' என்று கூற அங்கிருந்து அம்மனை எடுத்து பூசாரிகள் கோயிலில் வைத்து வழிபட்டனர். காலம் செல்லச் செல்ல அன்னையின் மகிமை பெருகி ஏராளமான பக்தர்களின் பிணிகள் நீங்கி மற்றும் பக்தர்கள் வேண்டும் வரம் கிடைக்கப் பெற்றதன் பயனாக அன்னைக்குப் பெருங்கோயில் அமைத்து, பெருந்திருவிழா ஏற்பாடு செய்யப் பெற்று நடைபெற்று வருகிறது. அருள்மிகு மாரியம்மன் ஆடிப் பெருந்திருவிழா ஆடிமாதம் 19ம் நாள் (4.8.2006) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் துவங்கி ஆடி மாதம் 26ம் நாள் (11-8-2006) உற்சவர் கோயிவிலிலிருந்து எழுந்தருளி வீதிவலம் வந்து திருக்கோயில் அடைந்து வீற்றிருந்து ஆடிமாதம் 27ம் நாள் 12.8.2006 அன்று அதிகாலை உற்சவர் கோயில் சென்றடைகிறார்கள். இப்பெருந்திருவிழாவில் பக்தர்கள் அனைவரும் வருகை புரிந்து அருள்மிகு மாரியம்மனைத் தரிசித்து அருள்பெற அன்புடன் அழைக்கிறோம்.

### ஆடிப்பெருந்திருவிழா நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - | 04.08.2006 ஆடிமாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் |
| உற்சவர் திருவிழா | - | 11.08.2006 ஆடி மாதம் 26 ம் நாள் வெள்ளிக்கிழமை உற்சவர் புறப்பாடு பகல் 1.00 மணிக்கு மேல் 2.30 மணிக்குள் உற்சவர் வீதி உலா புறப்பாடு. திருக்கோயில் அடைதல். |
| | | 12.08.2006 ஆடி மாதம் 27ம் நாள் சனிக்கிழமை காலை 5.30 மணி முதல் 6.30 மணிக்குள் உற்சவர் கோயில் சென்றடைதல். |

அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக !!

**க. இராஜமாணிக்கம்**
உதவி ஆணையர்/
செயல் அலுவலர் (கூ.பொ,)

**பரம்பரை அறங்காவலர் குழு**
திரு. எஸ்.ஏ. இராஜேந்திரன் பூசாரி
நிர்வாக அறங்காவலர்
திரு. சொ. சேதுலிங்கம் பூசாரி.
திரு. ச. ராமர் பூசாரி.
திரு. இரா. சௌந்தரராஜன் பூசாரி.
திரு. எஸ். கதிரேசன் பூசாரி.
திரு. ச. இராமர் பூசாரி.
திரு. இரா. அரிராம் பூசாரி.
திரு. இரா. மாரிமுத்து பூசாரி.
திரு. எஸ்.ஆர்.எம். இராமமூர்த்தி பூசாரி.
திரு. ஆர். மகாராஜன் பூசாரி.
திரு. ச. மாரிமுத்து பூசாரி.

# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2037 விய- ஆடி
மாலை 48 மணி 7 ஜூலை 2006

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு, இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதியும் உள்ள அனைத்துச் சாதியினரும், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் அர்ச்சகராகலாம் என அரசாணை வெளியிட்டதைத் தொடர்ந்து, அத்திட்டத்தைச் செம்மையுடன் செயல்படுத்த வேண்டி மாண்பமை நீதியரசர் திரு ஏ.கே. ராஜன் அவர்களின் தலைமையில், வணங்குதலுக்குரிய ஆதீனங்கள், போற்றுதலுக்குரிய சான்றோர்கள் ஆகியோரைக் கொண்ட உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது.

வழக்கம்போல அறிஞர் பெருமக்களின் கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளுடன் இம்மாத திருக்கோயில் இதழ் வெளிவந்துள்ளது.

திருக்கடவூர் எனும் திருக்கடையூரில் எழுந்தருளியுள்ள அன்னை அபிராமி மீது அபிராமி பட்டர் பாடியருளிய 'அபிராமி அந்தாதி' பாராயணம் செய்ய ஏற்ற பனுவல்.

பேராசிரியர் டாக்டர் சரசுவதி இராமநாதன், அபிராமி அந்தாதியிலிருந்து சில பாக்களை எடுத்து, பக்தி ரசம் ததும்ப எழுத்தோவியமாக்கி இருக்கிறார், படித்து இன்புறத்தக்க கட்டுரை.

திருக்கோயில்களில் வடிவமைக்கப்படும் சிற்பங்கள் யாவும் நமது சமய வரலாற்று சார்புடைய சிறப்பான கலைப்படைப்புகளாகும் என்பதை ''மீனாட்சி திருக்கல்யாணம் சிற்பக்காட்சி'' எனும் கட்டுரை வாயிலாக ஸ்தபதி கீ.செல்வநாதன், பொன்னி செல்வநாதன் கருத்தாழமிக்க செய்திகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆய்வுரைத் திலகம், முனைவர் அ.அறிவொளி, அவர்களின் ''குறைவில்லா நிறைவு'' எனும் கட்டுரை அரிய வாழ்வியல் கட்டுரை, ஆழ்ந்து படித்து சிந்திக்கத்தக்கது.

தமிழ்நாட்டு சித்தர் பரம்பரையில் ''அகத்தியர்'' குறித்து செந்தமிழ் வாரிதி முனைவர்.இரா.செல்வக்கணபதி அவர்களும், திருமந்திரத்தினை ஆய்வு செய்து ''திருமந்திர உபதேசம்'' எனும் தலைப்பில் திரு.டி.வி. வெங்கட்ராமன் அவர்களும், பரந்தாமனின் பாக்கியம் பெற்ற ஆண்டாள் என ஆய்வு செய்து ''கூடாரவல்லியின் குதூகலப் பாட்டு'' எனும் தலைப்பில் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்களும் வழங்கியுள்ள கருத்தோவியங்கள் இவ்விதழில் வெளிவந்துள்ளன.

திரு அழ.முத்துப்பழனியப்பன் படைத்துள்ள காலப் பெட்டகம் - ''கல்வெட்டில் ஒரு தீர்ப்பு'' எனும் கட்டுரையில் திருவண்ணாமலை மாவட்டம், தாமரைப்பாக்கம் எனும் ஊரிலுள்ள அருள்மிகு அக்னீசுவரர் திருக்கோயிலிலுள்ள கல்வெட்டில், பண்டை நாளில் கொலை வழக்கு ஒன்றிற்கு அளித்துள்ள தீர்ப்புரை வித்தியாசமான தீர்ப்புரையாக உள்ளது. இத்தகைய அரிய செய்திகள் கொண்ட கல்வெட்டு செய்திகளும் அவ்வப்போது திருக்கோயில் இதழில் தொடர்ந்து வெளிவரும்.

பேராசிரியர் அரங்க இராமலிங்கம் - தெய்வப் புலவரின் தெய்வ வழிபாடு எனும் தலைப்பில் உலகப் பொதுமறையான திருக்குறளில் வரும் தெய்வ நம்பிக்கை குறித்தான பாக்களைத் தொகுத்து அரிய ஆய்வு கட்டுரையாக அளித்துள்ளார்.

சைவ, வைணவத் திருத்தலங்களைக் குறித்த 'திருத்தல உலா' எனும் பகுதியில், இம்மாத இதழில் சென்னை மாநகரை அடுத்து அமைந்துள்ள திருமுல்லைவாயில், திருநீர்மலை மற்றும், திருவதிகை அருள்மிகு வீரட்டானேசுவரர் ஆகிய திருக்கோயில்களின் தலவரலாறுகள் வெளிவந்துள்ளன.

அனைவரும் திருக்கோயில் இதழைப் படித்து மகிழ்ந்திட அன்புடன் வேண்டுகிறேன்.


அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

அரசு ஆணை

# சாதிப்பாகுபாடின்றி அர்ச்சகர் நியமனம் உயர்நிலைக் குழு அமைத்தல்



இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்து சாதியினரும் தமிழ்நாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்து சமய திருக்கோயில்களில், அர்ச்சகர் ஆகலாம் என்று அரசாணை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அரசாணையை சிறப்பாக செயல்படுத்திட அர்ச்சகர்கள் பயிற்சிக்கான பாடத்திட்டம், அடிப்படைக் கல்வித் தகுதி, பயிற்சிக் கால வரையறை, பயிற்சி நிலையங்கள் அமைப்பது போன்ற பொருட்களின் மீது கொள்கை ரீதியாக முடிவெடுக்க கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள்<br>ஓய்வு பெற்ற சென்னை<br>உயர்நீதிமன்ற நீதிபதி | - தலைவர் |
| 2. | திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,<br>ஆணையர், இந்து சமய அறநிலைய<br>ஆட்சித்துறை, சென்னை - 34. | - உறுப்பினர் / செயலாளர்<br>(பதவி வழி) |
| 3. | தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக<br>அடிகளார் அவர்கள்<br>குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் | - உறுப்பினர் |
| 4. | திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்<br>கயிலை குருமணி சீர்வளர்சீர், சாந்தலிங்க ராமசாமி<br>அடிகளார் அவர்கள், பேரூர் | - உறுப்பினர் |
| 5. | ஸ்ரீரங்க நாராயண ஜீயர் சுவாமிகள் அவர்கள்<br>ஸ்ரீரங்கம் | - உறுப்பினர் |
| 6. | சிவநெறிச் செம்மல்,<br>முனைவர் பிச்சைசிவாச்சாரியார் அவர்கள்<br>பிள்ளையார்பட்டி | - உறுப்பினர் |
| 7. | சிவகாம சிரோமணி திரு. கே. சந்திரசேகர பட்டர்<br>அவர்கள், திருப்பரங்குன்றம் | - உறுப்பினர் |

அரசாணை (நிலை)எண் 120
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் (அநி4-2) துறை
நாள் 10.06.2006



மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை செயலாளர் திரு.ஆர். கற்பூரசுந்தரபாண்டியன்., இ.ஆ.ப., மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு. த. பிச்சாண்டி., இ.ஆ.ப., ஆகியோருடன்.

## இதழின் உள்ளே ....


1. நல்லன எல்லாம் தரும் - டாக்டர் சரசுவதி இராமநாதன் 4

2. மீனாட்சி திருக்கல்யாண சிற்பக் காட்சி - ஸ்தபதி கீ.செல்வநாதன் - பொன்னி செல்வநாதன் 7

3. குறைவில்லா நிறைவு - ஆய்வுரைத் திலகம் முனைவர் அ.அறிவொளி எம்.ஏ., பி.எச்டி., 10

4. வைகுண்டம் கூப்பிடும் தூரந்தான் - பெ. இராமநாத பிள்ளை 13

5. காலப் பெட்டகம் "கல்வெட்டில் ஒரு தீர்ப்பு" - அழ. முத்துப்பழனியப்பன் 14

6. சந்தனம் கொண்ட சுந்தரலிங்கம் - புலவர் வி.ராஜா எம்.ஏ., 15

7. கூடாரவல்லிக் குதூகலப் பாட்டு - தமிழாகரர் தெ.முருகசாமி எம்.ஏ.,பி.ஓ.எல்., 18

8. தெய்வப் புலவரின் தெய்வ வழிபாடு - டாக்டர் அரங்க இராமலிங்கம் தமிழ்ப் பேராசிரியர் 21

9. கேட்ட வரம் அருளும் கோட்டை மாரி 23

10. இடருக்கு இடர் கொடுத்தவனும் இடம் பெயர்ந்த ராமனும் - அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், செங்கல்பட்டு 25

11. திருமந்திர உபதேசம் - டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப., (ஓய்வு) 28

12. தமிழ்நாட்டுச்சித்தர் பரம்பரை - அகத்தியர் - முனைவர் இரா. செலவக்கணபதி 30

13. இறைவனே மிகப் பெரியவன் - டி.சந்திரசேகரன்., இ.ஆ.ப., 32

14. அட்ட வீரட்டத் தலங்கள் - பேராசிரியர் பெ.பாண்டியன், எம்.ஏ., எம்.பிஎல்., 35

15. தீராத வினைகள் தீர்க்கும் திருநீர்மலை 38




# நல்லன எல்லாம் தரும்

டாக்டர். சரசுவதி இராமநாதன்.
பள்ளத்தூர் - 630107

உலகத்து உயிர்களுள் மிகச் சிறந்தவன் மனிதன், கண்போன போக்கில், கால் போன போக்கில் போகும் விலங்கு, புள் இவை போலல்லாமல், மனம் ஏவ, அதன் வழி, பகுத்து, அறிந்து நடப்பவன் மனிதன். அவனுடைய மனம் கண்ட மிகப்பெரிய துணை, விழுத்துணை, என்னும் விழாத்துணை, ஈடேற்றும் துணை ''இறை நம்பிக்கை''

''அபிராமி எந்தன் விழுத்துணை'' என்றார் அபிராமி பட்டர். ''விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள்'' என்கிறார் அருணகிரியார்.

அந்தத் துணையை நாம் பற்றிக் கொள்ளச் சில வடிவங்கள் தேவை. அந்தத் திருமேனிகளை உள்ளே தாங்கி நிற்கும் திருக்கோயில்களைத் தமிழகம் பெருவாரியாகக் கொண்டிருப்பது தமிழகத்தின் பெருமை.! தமிழக அரசின் சின்னமே திருக்கோயிலின் கோபுரம் என்பது ஆன்மீக உணர்வுள்ள நமக்கெல்லாம் பெருமகிழ்வு தருகிறது.

### திருக்கடவூர்

இன்று உலகில் பல பாகங்களிலிருந்தும் வந்து திருக்கடவூர் என்னும் திருக்கடையூரில் பிறந்த நாள், மணிவிழா, பீமரத சாந்தி (70 வது பிறந்த நாள்) முத்து விழா எனும் சதாபிஷேகம் (80) என்று விழாக்கள் நடத்துகின்றனர். கடவூர் மயானம் (காலனை உதைத்ததால்) காலனை வெல்ல அருள்தரும் தலம். பிரார்த்தனைத் தலம். அன்னை அபிராமி அருள்பொழி விழி மலர்கள் உடையவள். அன்னை அபிராமி மீது அபிராமி பட்டர் பாடியருளிய ''அபிராமி அந்தாதி'' பாராயணம் செய்ய ஏற்ற பனுவல்.

### சொல்லும், பொருளும்

இறைவனும், இறைவியும் ''வாக் அர்த்தா இவ் சம்ப்ருக்தெள'' (சொல்லும் அதன் பொருளும் என) இணைந்திருப்பதாகக் காளிதாசன் பாடினார். அபிராமி பட்டரும் ''சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியே'' என்று அன்னை அபிராமியை அழைக்கிறார். நூலுக்குச் சொல்லழகும் பொருளழகும் இருகண்கள்.

1. அபிராமி அந்தாதி பக்திப் பனுவல் என்பதுடன் அந்தாதி என்ற இலக்கிய வகையில் அற்புதமான நூல். முதல் பாடலின் இறுதிச் சொல்லோ, அசையோ, எழுத்தோ அடுத்த பாடலின் முதலாக வருவது, ''அந்தம் முதலாகத் தொடுப்பது'' அந்தாதியாகும். அதற்குச் சரியான எடுத்துக்காட்டு அபிராமி அந்தாதி.

2. ஒரு முறை வாகீசகலாநிதி கி.வா.ஜ அவர்களிடம் பேசும்போது ''அபிராமி அந்தாதியில் மார்க்கண்டேயர் பெயர் கூட இல்லையே! மார்க்கண்டனுக்காகக் காலனைக் காய்ந்த தலமல்லவா இது?'' என்றேன். உடனே கலைமகளின் ஆசிரியரான, வாகீசகலாநிதி நான்காம் பாடல் என்ன என்றார். ''மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்து'' என்று பாடினேன். ''மாயா முனிவர் மார்க்கண்டேயர், என்றும் பதினாறாக சிரஞ்சீவியாக வாழ்பவர். அவரைத்தான் மாயா முனிவர் என்றார் பட்டர்'' என்று கொடுத்த விளக்கம் இன்றும் நினைவில் பசுமையாக உள்ளது.

3. ''ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி,'' என்பது அழகிய உவமை. தயிர் கடையும் மத்து அலையும்; திரியும்; தயிரும் அலம்பும்;

பிறவிக்கடலில் அப்படி அலைகிறேன் என்றார் அபிராமி பட்டர். தயிர் கடைவது எப்போது நிறுத்தப்படும். பக்குவமாக வெண்ணெய் திரண்டால் தானே! வினைப்பயனிலிருந்து நீங்கி உயிர்பக்குவம் பெற்று விட்டால் பிறவிக்கடலில் அலைய வேண்டாம்.

''சின்னஞ் சிறிய மருங்கினில் சார்த்திய
செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையுமுத்
தாரமும்
கன்னங்கரிய குழலும்'' (53)

இந்த அடிகளில் முரண் தொடை (சிறியபெரிய - செய்ய கரிய) அழகாக அமைந்துள்ளது.

அம்பாளின் பெயர்களை எத்தனை அழகாக அடுக்கிச் சொல்லி நம்மையும் சொல்ல வைக்கிறார்பாருங்கள்

''நாயகி, நான்முகி, நாராயணி
கை நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி, சூலினி,
மாதங்கி'' (50)

சுந்தரி, அந்தரி, நீலி, பயிரவி, பஞ்சமி,
பாசாங்குசை, பஞ்சபாணி,
உயர்சண்டி, காளி,
கலா வயிரவி, மண்டலி, மாலினி, சூலி,
வராஹி,

என்றெல்லாம் அம்மையின் நாமங்கள் செப்புவரே!

''உடையாளை, ஒல்கு செம்பட்டு
உடையாளை, ஒளிர் மதிச்செஞ்

சடையாளை, வஞ்சகர் நெஞ்சு
அடையாளை, தயங்கு நுண்ணூல்

இடையாளை, எங்கள் பெம்மான்
இடையாளை இங்கு என்னை இனிப்

படையாளை, உங்களையும் படையா
வண்ணம் பார்த்திருமே'' (84)

உடையாளை - எம்மை ஆள் உடையவளை

செம்பட்டுடையாளை - சிவந்த பட்டாடை
அணிந்தவளை

மதிச் செஞ்சடையாளை - சந்திரனைச்
சூடிய சடை உடையாளை

வஞ்சகர் நெஞ்சு அடையாளை - என்னை இனிப் படையாதவளை வணங்கி, வேண்டி உங்களையும் பிறவி அடையச் செய்யாமல் அருளச்சொல்லுங்கள்.

நம்பிக்கை தருகிறார்

அபிராமி அந்தாதியில் நாம் அனைவரும் விரும்பி மகிழ்ந்து வாழ்த்திப்பாடும் பாடல் 69 ஆம் திருப்பாடல்

''தனம் தரும், கல்வி தரும் ஒரு நாளும்
தளர்வறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும்,
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும், பூங்குழலாள் அபிராமி
கடைக் கண்களே''

எத்தனை நம்பிக்கை! சமயம் நமக்கு நம்பிக்கை தருவதற்கே!

''நமக்கும் மேலே ஒருவனடா - அவன்
நாலும் தெரிந்த தலைவனடா''

என நம்புவதும்

''காலமகள் கண்திறப்பாள் சின்னையா
நாம் கண்கலங்கிக் கவலைப்பட்டு
என்னையா!''

என்று ஆறுதல் கொள்வதும் பக்திக்கு அழகு. அந்த வகையில் ''இறைவா! பன்னிரு விழிகளிலே பரிவுடன் ஒரு விழியால் எனை நீ பார்த்தாலும் போதும்!'' என்று உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் எழுதிய பாடல் வரிகள் எனக்கு மிகவும் பிடித்த வரிகள். 12 விழிகளால் பார்த்தால் நாங்கள் தாங்க மாட்டோம். கோடி சூரியப் பிரகாசத்தை எங்கள் வெற்று விழிகள் தாங்குமா! ஒரு விழி போதுமே அருள் செய்ய! என்கிறார் கவிஞர். அபிராமி பட்டரோ ஒருவிழி முழுமையும் நம்மைக் காண வேண்டாம். ஓரப் பார்வையான கடைக்கண் பார்வை போதுமே என்கிறார். அந்தக் கடைக்கண்களின் அருள் நமக்குத் தனம் தரும் என்றார். மனித வாழ்வை அர்த்தம் (பொருள்) உள்ளதாகச் செய்வது அர்த்தம் (பொருள்)தான். ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்'' என்றார் வான்புகழ் வள்ளுவர்.

செல்வம் தரும் போதும், உயிர்களைக் காக்கும் போதும் விஷ்ணு ரூபிணி, கோவிந்த ரூபிணி, திருமகள் , செந்திரு, மகாலட்சுமி, அலைமகள், செந்தாமரையில் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கனைய நாயகியாக அன்னை இருக்கிறாள். ''கோவிந்தரூபிணி, விஷ்ணு ரூபா, என்று லலிதா சஹஸ்ர நாமம் கூறும்.''

கல்வி தரும் கலைமகள் அவளே, ''படைப்பவள் அவளே, காப்பவள் அவளே;

அழிப்பவள் அவளே சக்தி''

**''பூத்தவளே, புவனம் பதினான்கையும்**
**பூத்த வண்ணம்**
**காத்தவளே, பின், கரந்தவளே! (13)**

என்று அழைத்து மகிழ்கிறார் அபிராமி பட்டர்

''ஆயகலைகளை நமக்கு அள்ளித்தரும் வாணி, சரஸ்வதி, மாதவி, பாரதி, வாகதீஸ்வரி, மாணிக்க வீணை ஏந்திய மரகதவல்லி, ப்ரம்ம ரூபிணி, வெள்ளைக்கமலத்துவேணி, கலைத் தாய் அவளே!

வீரம் தரும் கலைமகள், அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, காளி, ஆலினி, துர்க்கா, மகாசக்தி, காளி, சாமுண்டி, மகிஷாசுரமர்த்தினி, மலைமகள் பார்வதி, மலையரசன் பொற்பாவை அவளே! (தளர்வறியா மனம் என்பது ஊக்கம், வீரம், ஆற்றல்)

அம்பிகையின் மஞ்சளும் குங்குமமும் மங்கலச் சின்னங்கள். அணிந்தவரின் பிணி தீர்த்து, முகத்தில் பொலிவு தருவன. அதனால் தெய்வ வடிவம் தரும்.

பக்தர்கள் , ''சக்திகள்'' என்று அழைத்துக் கொள்வர். மேல் மருவத்தூரில் அடிகளாரையே ''அம்மா'' என்கிறார்கள். ''சக்தி'' என்றுதான் ஒரு பக்தர் அடுத்தவரை விளிப்பார். ஐயப்பன்மார் அடுத்த பக்தரை ''என்ன ஐயப்பா!'' என்று விளிப்பது போல் ''சக்தி'' என்று மற்ற பக்தரை அழைப்பதும் அழகு.


அந்த அடியார் திருக்கூட்டமே சத்சங்கம் எனப்படும். நல்லடியார் கூட்டம் - நல்லிணக்கம் என்று ஔவையாரால் சுட்டப்பெற்றது. வள்ளல்பெருமானும்

**''வன்பெரு நெருப்பினைப் புன்புழுப்**
**பற்றுமோ!**
**மலையை ஈசிறகால் அசைக்குமோ!''**

என்ற தெய்வமணி மாலைப் பாடலில் அடியார் திருக்கூட்டச்சிறப்பைப் போற்றுவர்.

அத்தகைய ''நெஞ்சில் வஞ்சமில்லா இனம்'' தருபவள் அன்னை.

ஏன் ஒவ்வொன்றாக அடுக்க வேண்டும். அபிராமி பட்டர் ''நல்லன எல்லாம் தரும்'' என முத்தாய்ப்பு வைக்கிறார். இதற்கு மேல் வேறு என்ன அருள்வேண்டும்! (நல்லன - தனி மனிதன் வாழ்வுக்கு நல்லன ; அவனால் சமுதாயம், இனம் நன்மை பெற ஏற்ற நல்லன; உலகம் பேரின்பப் பெரு வாழ்வு பெற நல்லன; எல்லாம் தருவாள்) நல்லன எல்லாம் பெற நாம் செய்ய வேண்டியது



என்ன ! அபிராமியின் திருவடி மலர்களைச் சார்ந்து, பக்தி செய்ய வேண்டியது தான்.

**''சிவகாம சுந்தரி சீறடிக்கே சாரும்**
**தவமுடையார்**
**படையாத தனம் இல்லையே!'' (68)**

நம் குறை தீர ஏத்த வேண்டியது நம் கடமை. நம்மைத் தாங்குவது அவள் கடமை. தொழுது, அழுது, காமுற்று, பாடி, ஆடி, தூமலர் தூவித் துதிப்பது நம் கடமை. கண்களிக்கக் காட்சி தந்து, மண் துதிக்க மாட்சி தந்து, விண்ணளிக்கும் பதம் தருவது அவள் கடமை.

நாமங்கள் செப்புக.
தோத்திரம் சொல்க.
திருமேனி நெஞ்சில் குறிக்க.
அழகை நெஞ்சில் எழுதி வைக்க.

**''ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை**
**அண்டமெல்லாம்**
**பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை,**
**புவி அடங்கக்**
**காத்தாளை, ஐங்கணை பாசாங்குசமும்,**
**கரும்பும் அங்கை**
**சேர்த்தாளை, முக்கண்ணியைத்**
**தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே''**

★★★

# மீனாட்சி திருக்கல்யாண சிற்பக்காட்சி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

ஸ்தபதி கீ. செல்வநாதன் - பொன்னி செல்வநாதன்



அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அங்கயற்கன்னி மீனாட்சி அம்மனுக்கும் கல்யாண சுந்தரேஸ்வரர் ஈஸ்வரனுக்கும் திருக்கல்யாண வைபோகம் ஆண்டுதோறும் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம்.

உலகைப் படைத்த இறைவனுக்கும் இறைவிக்கும் சித்திரை மாதத்தில் நடை பெறுகின்ற இத்திருக்கல்யாண உற்சவத்தை மதுரை மாநகரே கண்டு ஆனந்த பரவசமடைவதை எழுத்தால் வர்ணிக்க முடியாதது எனலாம்.

பழமை வாய்ந்த இத்திருத்தலம் மூர்த்தி, தலம் மற்றும் தீர்த்தம் என முப்பான்மை சிறப்புகளையும் உள்ளடக்கியதாகும். மேலும், இத்திருக்கோயிலின் கட்டடக் கலை அமைப்பானது நாயக்கர் காலத்தில் உள்ள கலைப்பாணியை தழுவியே எழுப்பப் பட்டுள்ளது. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமெனில் விசயநகர காலத்து கலைப்பாணியானது படிமங்களை (உருவங்களை) வடிவமைப்பதில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்ததாக அறிஞர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். இக்கலைப்பாணியில் செதுக்கப்பட்டுள்ள தூண் சிற்பங்களில் வரக்கூடிய கடவுளர் திருவுருவங்களின் உடல் அமைப்பியலை (anatomy) மிகவும் நுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டிருப்பதே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாயக்கர் கலைப்பாணியில் தனித்து மிளிருகின்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் இடம் பெற்றுள்ள அனைத்து சிற்பங்களும் காண்போரை வியப்பில் ஆழ்த்துகின்ற வகையிலே அமைந்துள்ளன. சுவாமியின் திருசந்நிதியின் மகாமண்டபத்தில் காணப்படும் தூண்களிலும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த திருவுருவங்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் சுவாமிக்கும் அம்பிகைக்கும் நடைபெறும் திருக்கல்யாண வைபவத்தைச் சித்தரிக்கும் சிற்பக்காட்சியானது அங்கு வரும் அனைத்து அன்பர்களின் பார்வையை வெகுவாக கவருகின்றது. திருக்கல்யாண கோலத்தில் காணப்படுகின்ற இந்தச் சிற்பக் காட்சியினுள் புதைந்துள்ள உன்னத தத்துவநெறியைக் குறித்து பேரறிஞர்கள் இடையே பலவாறாக கருத்துக்கள் நிலவியும் வருகின்றது.

பழங்காலந்தொட்டே மரபு சிற்பியர் தாம் வடிக்கின்ற சிற்பங்களை உலகியலுக்கு ஏற்றவாறு தனித்தனியாக வகைப்படுத்தி வடிவமைத்து வந்தனர். ஆகவேதான் சிற்பிகள் செதுக்குகின்ற சிற்பங்களானது சமயத்தைச் சார்ந்தும், வரலாற்று நிகழ்வுகளை நினைவு கூர்ந்தும், சமுதாய வாழ்க்கையைப் பறைசாற்றியும் அற்புதம் நிறைந்த உயிரோவியங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன. இதனால் கலைப்பாணி மாறினாலும் கூட காலந்தொட்டு சிற்ப இலக்கணப்படி வடிவமைக்கப்பெறும்

சிற்பத்தின் சிறப்பியல்பு மாறிடவில்லை என்று சொல்லிடலாம்.

எனவேதான், சிற்பி வடிக்கும் சிற்பங்களில் பெரும்பான்மையின அக்கால பண்பாட்டின் நிகழ்வினையொட்டிய செய்திகளுடன் சிற்பியின் கற்பனையும் கலந்து கவின்மிகு சித்திரங்களாக விளக்கம் பெறுகின்றன.

சுவாமி சந்நிதியின் மகாமண்டபத்தில் காணப்படுகின்ற தூண்களில் ஒன்று இறைவனுக்கும் இறைவிக்கும் நடைபெறும் திருக்கல்யாணக் கோலத்தை எழிலார்ந்த சிற்பமாககாட்டுகின்றது. அந்நிகழ்ச்சியின் போது அம்பிகையின் சகோதரராகிய மகாவிஷ்ணு 'தாரை வார்த்தல்' என்ற சம்பிரதாயத்தைப் பின்பற்றி தமது தமக்கையை ஈஸ்வரனுக்கு தாரை வார்ப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பக் காட்சிக்கு மேலும் எழிலூட்டும் வகையில் மணப்பெண்ணாகிய மீனாட்சியின் பின்னால் அழகிய கற்பக(தரு) மரத்தையும் சிற்பிகள் செதுக்கியுள்ளனர்.

தமிழ் மரபில் 'கரம் பிடித்தல்' ஐயே பெரும்பாலும் திருக்கல்யாண நிகழ்ச்சியாகப் போற்றி வந்தார்கள் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதனையே குமார சம்பவத்தில் ஈசனும் பார்வதியின் மென்மையான சிவந்த கையைப் பற்றினார் என்றுளது (74-80 வது காண்டம்). இத்திருக்கோலத்தினைக் கேரள நாட்டில் பழமை வாய்ந்த மட்டஞ்சேரி அரண்மனையில் உள்ள அறைகளின் ஒரு சுவற்றில் சித்திர கலாபனத்தில் (mural painting) விஷ்ணுவால் 'பாணிக்கிரகனம்' செய்விக்கப்பட்டதாகவே காணப்படுகின்ற அச்சித்திரம் மிகவும் அரியதொரு கலைப்படைப்பாகும். அடுத்து, பிரிட்டீஸ் அருங்காட்சியகத்தில் (British Museum) வைக்கப்பட்டுள்ள ஒரே மணல்கல்லிலான (Sand-Stone) மீனாட்சி திருக்கல்யாண கோலமானது மனிதக் கலாச்சாரத்தை எடுத்துக்காட்டுகின்ற வகையில் அமைந்த அற்புத படைப்பாகும். இன்னும் சொல்லப்போனால் சிலம்பின் காவியத்தில் கோவலன் கண்ணகி திருக்கல்யாணத்தில் 'மங்களநாண் பூட்டுதல்' அல்லது 'இழையணி' போன்றவை அக்காலத்தில் சம்பிரதாயமாக இருந்து வந்ததைக் குறிப்பிடுகிறார் அந்நூலாசிரியர். இப்படியாக திருக்கல்யாண சடங்குகள் அந்தந்த காலத்திற்கேற்ப நடைமுறையில் மாற்றம் கொண்டுவிட்டன.

ஆகவே, நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்கள் 'தாரை வார்த்தலையே' திருக்கல்யாணங்களில் பின்பற்றியிருக்க வேண்டும் என இச்சிற்பத்தின் வாயிலாக தெரிய வருகின்றது. மேலும், இத்திருக்கோலமானது சாஸ்திர கோட்பாடுகளுக்கேற்ப கலை நயத்துடன் சிற்ப இலக்கணத்திலிருந்து சிறிதும் பிறழாமல்

''.......பார்வதி வாமஹஸ்தே துத்பலம் தக்ஷிண ஹரே
தேவ ஹஸ்தேன சங்கிரஹ ச்ச......விஷ்ணுஸ்த்ரிபங்க
ரூபேண ஸ்வர்ண கலசோத் துதஹ சங்கசக்ரததௌ
ஹஸ்தௌ தத்யாத் உதஹ பூர்வஹம்......''

என சகளாதிகாரத்திலும்

''...பார்வதி தேவியின் வலது கையைத் தன்னுடைய
வலது கையினாலேயே பிடித்துக் கொண்டு...''

என ஸ்ரீதத்துவநிதியிலும்,

''...இறைவன் தேவி கௌரியின் வலக்கரத்தைப்
பிடித்திருக்க...தேவியின் வலக்கரம்
இறைவனின் வலக்கரத்துள் வைத்தும்..''

என அம்சுமத்பேதாகமித்திலும்

குறிப்பிடுவதைப் போல அமைக்கப்பட்டு காண்போரை வியப்படைய வைக்கின்றது.

விஞ்ஞான ரீதியாக இச்சிற்பக் காட்சிக்கு சிற்பியர் மரபில் மற்றுமொரு விளக்கம் கூறப் படுவதும் உண்டு.

சக்தியின் சொரூபநிலையை மீனாட்சியும், சிவனின் அருவ நிலையை சுந்தரேஸ்வரரும் பிரதிபலிக்கும் அந்நிலையை - சிவசக்தியின் ஐக்கியத்தை, பிரபஞ்சதத்துவத்தின் விளக்கத்தை லௌகீக வாழ்க்கை நெறிமுறைக்கு விஷ்ணுவைக் கொண்டு ''தாரை வார்த்தல்'' என்ற இச்சடங்கின் மூலமாக பக்தர்களுக்கு எளிய முறையில் உணர்த்துவதாக விளக்கம் கொள்ளப்படுவதும் உண்டு.

இச்சிற்பக் காட்சியில் காணப்படும் கற்பக மரமானது காமதேனுவைப் போல் எல்லாம் அளிக்கக்கூடிய வல்லமைப் பெற்றது. அதுபோலவே, அனைத்துலகத்திற்கும் அம்மையப்பனாக அருள்பாலிக்கும் இறைவன் இறைவியிடம் வேண்டுவதெல்லாம் அளிக்கப் படும் என்பதை சுட்டிக் காட்டுகிறது இம்மரம். இவ்வாறு தேர்ந்தெடுத்த கற்பகத்தருவை

சிற்பியின் கற்பனையில் உதித்த கவின்மிகு ஓவியம் என்றே சொல்லலாம்.



திருக்கோயில்களில் வடிவமைக்கப்படும் சிற்பங்கள் யாவும் வணங்குதலுக்குரிய சமய சார்புடைய மற்றும் வரலாற்று தொடர்புடைய சிற்பங்கள் மட்டுமில்லை. அவை அந்தந்த காலத்தில் சமுதாய ரீதியாக ஏற்படுகின்ற நிகழ்வுகள் மற்றும் அக்காலத்தின் பண்பாட்டினைச் சுட்டிக்காட்டும் வகையில் அமையப்பெற்ற சிறப்புமிக்க கலைப் படைப்புக்கள். இது போன்ற கருத்தாழமிக்க செய்திகளை உள்ளடக்கிய சிற்பக்காட்சிகள் தான் பழம்பெருமை வாய்ந்த நமது பாரதத் திருநாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மடியாமல் பாதுகாத்து வருகின்றன எனில் மிகையாகாது.

★★★

# இடர் களைவாய் இறைவா

**சிவ. அம்பலவாணன்**

வினையின் பயனாய் ஆன்மாக்களுக்கு ஏற்படும் அல்லல்களை களைவது இறைவன் அருள். அவன் அருளின்றி இடர்கள் அகலா. அருள் கிட்டின் பகலவன் கண்ட பனி போல் விலகும் என்பது நிச்சயம்.

அடியார்களுக்கு ஏற்படும் இடர்களைக் களையும் இறைவனைப் போற்றித் துதிக்க திருமுறைகளில் மூவர் தேவாரங்களில் நான்கு இடர்களையும் பதிகங்கள் உள்ளன. அத்தகைய பதிகங்கள் திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்கு மங்கையர்க்கரசியின் வேண்டுதல்படி சைவம் தழைத்தோங்கவும், சமணம் விலகவும் புறப்பட்ட திருஞானசம்பந்தரின் பயணத்தின் முன்பு ''நாளும், கோளும்'' சரியில்லையென்று கூறிய அப்பர் பெருமானுக்கு பதிலுரையாக வெளியிட்ட பதிகம் சம்பந்தரின் ''கோளறு பதிகமாகும்''

திருநெடுங்களத்தில் அருளிய ''மறையுடையாய் தோலுடையாய்'' என்ற பதிகமும், ஆவடுதுறையில் அருளிய ''இடரினும் தளரினும்'' எனும் பதிகமும், வடதிருமுல்லைவாயிலில் சுந்தரரின் திருப்பாட்டாக வெளியிடப்பட்ட ''திருவும்'' என்ற பதிகமும் என்பர் சைவ நல்லுலகத்தினர். திருநெடுங்களத்தில் அருளிச் செய்த முதலாம் திருமுறையில் ''மறையுடையாய்'' எனத் தொடங்கும் பதிகத்தினை சென்ற இதழில் கண்டோம். இவ்விதழில் ''கனைத்தொழுந்த'' எனத் தொடங்கும் பதிகத்தினைக் காண்போம்.

ஆரவாரத்தோடு தோன்றிய வெண்மையான
அலைகள் சூழ்ந்த கடலிடையுண்டான
நஞ்சினை
மிகச்சிறிய அளவாகக் கழுத்தினில் வைத்த
பெருமையுடைய தேவனே! உன்னை
மனதில்
நினைத்து பாடல்களும் ஆடல்களும்
கொண்டு
இரவும் பகலும் போற்றுபவர்களின்
இடர்களைக்
களைந்து அருள்புரிவாயாக
திருநெடுங்களத்தை
விரும்பிக் கோயில் கொண்டுள்ள
பெருமானே.

''கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ்
சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே
வயினின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய் நெடுங்களமே
யவனே''

நம் இடர்கள் களைய ஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள முதலாம் திருமுறையில் வரும் இப்பாடலை இம்மாத பாராயணப் பகுதியாகக் கொண்டு பாராயணம் செய்து பலன் பெறுவோமாக.



# குறைவில்லா நிறைவு

ஆய்வுரைத் திலகம்
முனைவர். அ.அறிவொளி எம்.ஏ., பி.எச்டி.,

இந்தப் பிரபஞ்சப் படைப்பு நிறைவானது. ஆனால் சிலநேரங்களில் குறை இருப்பது போல நமக்கு தோன்றும்.

பூகம்பம், சுனாமி, எரிமலை, புயல்- முதலிய சீற்றங்களால் பேரழிவு ஏற்படும் போது ஏதோ குறை என்று நாம் நினைப்போம்.

வானசாத்திரத்தில் அறிவியலார் கூறுவதைப் பார்த்தால் இந்த எண்ணம் மாறும்.

ஒவ்வொரு நொடியிலும் பேரண்டப் பகுதியில் ஒன்றில் மற்றஒன்று மோதுவதைத்தான் அறிவியலார் கூறுகிறார்கள். சரியான கால கணிதத்தில் வால் நட்சத்திரங்கள் வருகின்றன. ஒரே நேர் கோட்டில் தூரத்தில் உள்ள இரு கிரகங்கள் பயணமாகின்றன. ஒவ்வொரு நொடியும் அழிவின் பிடியிலிருந்துதான் இந்தப் படைப்பு மீள்வதை நாம் உணர முடியும்.

இத்தனை அழிவுகளிலும் இந்த உலகம் நானூறு கோடி ஆண்டுகளாக இருந்து வருவது நமக்குப் புதிராக இருக்கிறது.

எனவே அழிவை நடத்தும் இயற்கை அழியாத ஒரு நிலையையும் உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது.

கடவுளின் அருளால்தான் இந்த முரண்பாடான நிலை என நாம் உணருகிறோம்.

நம்முடைய அகால மரணம், பெரும் துன்பம், பணப்பற்றாக்குறை, தோல்விகள் யாவற்றிலும் இந்தப் படைப்பு சரிஇல்லை என்று நமக்குள் ஓர் அழுகுரல் கேட்கும்.

ஒரு வீட்டில் பையன் இறந்து போய் உறவினர் அழுகிறார்கள்.

அதற்கு அடுத்த வீட்டில் அதே வயதுடைய மகனுக்குத் திருமணம் செய்கிறார்கள். இரண்டையும் ஒரு புலவர் பார்த்தார்

''படைத்தான் மன்ற அப்பண்பிலாளன்''
என்று கடவுளைத் திட்டித் தீர்த்தார்.

சங்க காலத்தில் பாடிய இப்பாடலில் ஒரு தீர்வும் இப்பாடலிலேயே சொல்லப்பட்டுள்ளது.

'இந்த உலகம் துன்பமானதுதான் இதே உலகில் இன்பமும் இருப்பதைக் கண்டு மகிழுங்கள்' என்று அப்புலவர் கூறுகிறார்.

''இன்னாதம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதன் இயல்
புணர்ந்தோரே''

என்பது அப்பாடல் பகுதி (புறநானூறு)

வேகமாக விமானம் செல்கிறது கீழே ஒரு காரும் செல்கிறது. இப்படி வேகத்தில் செல்ல நேரும்போது விபத்தில் சிக்க வேண்டியது உள்ளது.

இந்த விபத்தைக் காணும்போது பெரிதும் கடவுளை யாரும் குறை சொல்வதில்லை. வேகமாகச் சென்ற மனிதர்களை மட்டுமே குறை சொல்கிறார்கள்.

'கல்பனா சாவ்லா' என்ற பெண் விஞ்ஞானி ஏறித் திரும்பிய 'ராக்கட்' வெடித்துச் சிதறியது. வானில் போகும்போது தட்பவெப்பக் கோளாறு அதைப் பாதிக்கவில்லை, இறங்கும் போது பாதித்தது. அப்போது யாரும் கடவுள் படைப்பைக் குறையாகச் சொல்லவில்லை.

மனித முயற்சியில் ஏற்பட்ட ஒரு குறை என்று சமாளித்தார்கள்.

45 வருடங்களுக்கு முன்பு எட்டுக் கிரகங்கள் கூடப்போவதை அறிந்து எல்லோரும் பயந்தார்கள். உலகமே அழியும் என்றும் சோதிடம் சொன்னார்கள். பாதிரிமார்கள் கோயில் குருக்கள்கள் பள்ளி வாசல் பரிசாரகர்கள் யாவரும் சிறப்பு வழிபாடு செய்தனர்.

ஆனால் ஒன்றும் நடக்கவில்லை எல்லோருக்கும் கடவுள் காப்பாற்றியதாக ஒரு மதிப்பு வந்துவிட்டது.

எல்லா அணுக்களும் சுழன்று கொண்டே இருக்கின்றன. எல்லா அண்டங்களும் சுழன்று கொண்டே இருக்கின்றன.

நம் உடம்பின் அணுக்கள் பலவும் சுழல்கின்றன. இப்படிச் சுழல்வதுதான் வாழ்வதாகும்.

இச்சுழற்சியில் விபத்து எற்படுவதும் தவிர்க்க முடியாததாகும்.

இளமை, முதுமை இவைகளை அனுபவிக்கும் மனிதன் இது கடவுளின் தவறு என்று சொல்லவில்லை. வளரும் ஒரு பொருளில் இளமை, முதுமை தவிர்க்க முடியாத ஒன்று என்று தெரிந்து விட்டது.

போர்கள் வருகின்றன, அவையும் தவிர்க்க முடியாத விபத்துக்களே. மருந்தும், மருத்துவர்களும் இருக்கிறார்கள் என்று கொஞ்சம் மகிழமுடிகிறது.

பம்பரம் சுற்றுகிற போது நிற்பது போல் தெரியும், சுற்றுவது நின்று விட்டால் கீழே விழுந்துவிடும். இதிலிருந்து ஒன்று தெரிகிறது சுற்றாமல் நிற்க முடியாது என்பதே அது.

இப்படி இந்த உலகம், இந்தப் படைப்பு சுற்றுவதால், சுழலுவதால் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இதை யாரும் நிறுத்த முடியாது. கடவுள் நிறுத்தினால் இச்சுழற்சி நிற்கலாம். நிலையாமையின் நடுவில்தான் நிலைப்பது என்பதை நாம் நாள்தோறும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தினம் தினம் ஆயிரக் கணக்கில் உலகம் முழுதும் இறப்பது உண்மை. ஆனால் உறங்குவதற்கு முன் யாராவது இதை நினைக்கிறோமா?

நினைத்தால் உறக்கம் வராது.

ஆனால் ஞானிகள் நொடிக்கு நொடி மரணம், விபத்து முதலிய நிலையாமையை நினைத்துக் கொண்டே வாழ்கிறார்கள்.

நிலையாமையை நினைத்து எப்படி நிலையாக வாழமுடிகிறது? என்றால் - இந்த நிலையாமை கடவுள் செயலல்ல, மாயையின் செயல்.

கடவுள் எப்போதும் நிலைத்த தன்மை உடையவர். அவரையே அடைந்து நிலைப்பதற்கு விரும்பும்போது நிலையாமை நம்மை அல்லது இந்த ஞானிகளைப் பாதிப்பதில்லை.

''எல்லாம் அவன் செயல்'' - என்ற திடமான முடிவு வரும் போது நிலையாமை நம்மைத் துன்புறுத்தாது.

தாயுமானவர் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகிறார். தான் என்ன செய்கிறோம் என்று யோசித்தார்.

பசி தீருமட்டும் உண்ணுகிறேன். விழிப்பு வரும் வரை உறங்குகிறேன் . இது தவிர வேறு எதையும் நான் செய்யவில்லை என்கிறார்.

''யோசிக்கும் வேளையில் பசிதீர
உண்பதுவும் உறங்குவதுமாக முடியும்''

என்பது அப்பாடல்.

இதையாவது நாம் செய்வதாக ஒரு திருப்தியைத் தரப்படுகிறதே தவிர, இதுவும் கூட அரை குறைதான்.

பசிக்கும் போது உண்ணுகிறோம் சரி ! பசி என்பது நாம் உண்டாக்கியதா? இல்லை அது தானாக நமக்குள் வந்தது.

உறங்குகிறோம் ; சரி உறங்க வேண்டும் என்று நாம் நினைத்தா உறங்குகிறோம். இல்லை.

உறங்கச் செய்யும் ஓர் முயற்சி வந்ததும் கொட்டாவி விடுகிறோம். கண்களைச் கசக்குகிறோம். தேநீர் குடித்து மாற்றுகிறோம்.

அப்படியானால் உறக்கமும் கூட நாமாகச் செய்வதில்லை. உடம்பு தானாகத் தூங்க முயல்கிறது. நாம் வேறு வழியில்லாமல் கட்டுப்பட்டுத் தூங்குகிறோம்.

விழிப்பதும் நாமாக விழிப்பதில்லை. மணியடிக்கும் அலாரத்தை நிறுத்துகிறோம். முகத்தில் படரும் வெளிச்சம் தடை என்று முகத்தை போர்வையால் மூடுகிறோம். எழுப்புகிறவரிடம் கடுமையாகப் பேசுகிறோம்.

இதனால் விழிப்பு இன்னும் வரவில்லை என்று தெரிகிறது. விழிப்பு முழுமையாக வந்து விட்டால் இதற்கு மேல் உறங்க முடியாது என்றும் தெரிகிறது.

இந்த உடம்பாகிய இயந்திரம் கடவுள் அறிவினால் மாயை என்ற கருவியால் செய்யப் பட்டது.

அதனால் நமக்குள் நம்மையறியாமல் பல செயல்கள் நடக்கின்றன.

பிரம்மா கூட ஒரு செயலும் செய்ய வில்லையாம். அப்படியானால் யார் படைக்கிறார்?

''இது பூனையாகட்டும் 'ஓம்' என்று பிரம்மா சொன்னதும் பூனை உண்டாகிறது''. ''இது யானையாகட்டும் 'ஓம்' என்று பிரம்மா சொன்னதும் அது யானையாகிறது.''

அவர் நினைத்தால் அது அது அப்படி அப்படி ஆகட்டும் என்று கடவுள் ஒரு ஏற்பாடு செய்து விட்டதால் பிரம்மா படைக்காமலே படைக்கிறார்.

அதாவது நினைப்பது மட்டுமே அவர் வேலை, அப்படி நடப்பதாகச் செய்வது கடவுள் வேலை என்று ஆகிவிட்டது.

''பிரம்மாதி ஆனாலும் ஐய ஒரு செயலும் இல்லை'' என்று தாயுமானவர் பாடுகிறார்.

ஆகவே எல்லாவற்றையும் குறையின்றி இறைவனே செய்தான், செய்கிறான், இனியும் செய்வான்.

ஆகவே ''அவனின்றி ஓர் அணுவும் அசையாது'' என்று பெரியோர் கூறினார்கள்.

''நாம் சாப்பிடுகிறோம்.இப்படி இப்படிச் செரிமானம் செய்'' என்று நாம் வயிற்றுக்குச் சொல்வதில்லை. சொல்வதற்கு நமக்குத் தெரியாது.

ஆனால் வயிற்றுக்கு நமக்குத் தெரியாத பக்குவம் அதற்குத் தெரிகிறது. எனவே செரிமானம் நடக்கிறது.

ஆகவே குறைபாடாக இப்படைப்பு இல்லை.

''குறை ஒன்றுமில்லை கோவிந்தா'' - என்றபடியே யாவும் உள்ளது.

பிரம்மத்திற்கு இப்படி ஒரு தெளிவான அறிவு இருக்கிறது என்று 'ரிக்' வேதம் சொல்கிறது.


''ப்ரக்ஞானம் ப்ரஹ்மம்''- என்பது அந்தச் சுலோகம் ஆகும்.

எனவே குறைவற்ற நிறைவாக உள்ள பரம்பொருளை நாம் உணர்வதற்காகக் குறைவுகள் உள்ள வாழ்வைக் கொடுத்ததாகவும் நாம் உணர வேண்டும். ''நிழல் கடுமை வெயிலில் தெரியும்'' என்பது போல எனலாம்.

★ ★ ★

# சென்னை கோட்டூர், பெருமாள் கோயில் திருமண மண்டபத்தைத் திறந்து வைக்க மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் நடவடிக்கை

சென்னை-85, கோட்டூர், அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டு, திறக்கப்படாமல் உள்ள திருமண மண்டபத்தை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் 22-06-2006 அன்று நேரில் பார்வையிட்டு உடனடியாகத் திறந்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்கள்,



மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமாக. ,கோட்டூர் ஏரிக்கரைச் சாலையிலுள்ள 2.04 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில், ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வண்ணம் திருமண மண்டபமொன்று கட்டுவதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாண்புமிகு மத்திய கப்பல், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 40 லட்சம் வழங்கினார்கள். மேலும், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலிலிருந்து ரூ. 10 லட்சம் கடனாகப் பெற்று மொத்தம் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் கடந்த செப்டம்பர் 2002 மாதத்தில் திருமண மண்டபம் கட்டி முடிக்கப் பெற்றது. மேற்படி திருமண மண்டபத்தின் அடித்தளம் மற்றும் முதல்தளம் சேர்த்து 9000 சதுர அடி பரப்பளவில் திருமண மண்டபம் அமைந்துள்ளது. திருமண மண்டபம் பூர்த்தியாகி சுமார் 4 ஆண்டுகளாகியும், திறப்பு விழா நடத்தப்படவில்லை.

22-6-2006 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், கோட்டூர், அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் திருமண மண்பத்தைப் பார்வையிட்டு, இதுவரை நடைபெற்ற பணிகளை ஆய்வு செய்த பின்னர், போர்க்கால அடிப்படையில் எஞ்சிய பணிகளை முடித்து கூடிய விரைவில் திறப்பு விழா நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

# வைகுண்டம் கூப்பிடும் தூரந்தான்

பெ.இராமநாத பிள்ளை



பூலோகத்திலிருந்து வைகுண்டம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்று கேட்டால் உண்மையான பக்தர்களுக்கு பூலோகத்திலிருந்து வைகுண்டம் கூப்பிடும் தூரந்தான் .

கஜேந்திரன் என்னும் யானை தினந்தோறும் நீர்த்தடாகத்திலுள்ள தாமரைப் பூவைக் கொய்து பெருமாளின் திருவடியில் சமர்ப்பித்து தன்னுடைய நித்ய பூஜையினை நிறைவேற்றி கொண்டிருக்கும்பொழுது, ஒரு நாள் நீர்நிலையில் இறங்கும்பொழுது, முதலையானது யானையின் காலை பிடித்துக் கொண்டு நீருக்குள் இழுத்தது. முதலையின் பிடியிலிருந்து தப்ப முடியாமல், பறித்த தாமரைப் பூவினைத் துதிக்கையில் வைத்துக் கொண்டு ''ஆதி மூலமே'' என ஓலமிட்டது.

அபயக் குரல் கேட்ட பெருமாள் அவ்விடத்தில் தோன்றி. யானையினைக் காப்பாற்றி முதலையை அழித்து, யானையின் (கஜேந்திரனின்) பூவினை பெற்றுக் கொண்டார்.

எனவே கூப்பிட்ட உடனே வைகுண்டத்திலிருந்து பெருமாள் பூலோகத்திற்கு வந்து உண்மையான பக்தியுடைய கஜேந்திரனைக் காப்பாற்றியதால், உண்மையான பக்தர்களுக்கு வைகுண்டம் கூப்பிடும் தூரந்தான் என்பது சிந்தித்து மகிழத்தக்கது .

# இம்மாதப் பாராயணப் பாசுரம்

## திருப்பல்லாண்டு



அண்டக்குலத்துக்கதிபதியாகி
அகரரிராக்கதரை *
இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த
இருடீகேசன்தனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுது
ஆயிரநாமம்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து
பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே.

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன்
ஏழ்படிகால்தொடங்கி *
வந்து வழிவழியாட் செய்கின்றோம்*
திருவோணத்திருவிழாவில்
அந்தியம்போதிலரியுருவாகி
அரியையழித்தவனை*
பந்தனைதீரப்பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே.



# காலப் பெட்டகம்
# கல்வெட்டில் ஒரு தீர்ப்பு

அழ. முத்துப்பழனியப்பன்

நாம் கோயிலுக்குப் போகிறோம்; சுவாமியை வணங்கி வெளி வருகிறோம். பழைய கோயில்களில், கோயில் சுவற்றின் வெளிப்பக்கத்தில், சில இடங்களில் தூண்களில் கூட, ஏதோ வெட்டி வைத்திருக்கிறார்கள். அந்தக் கல்வெட்டை நம்மால் படிக்க முடியவில்லை ; படிக்கவும் நேரம் இல்லை.

உண்மையில், அந்தக் கல்வெட்டுக்கள் பல செய்திகளைச் சொல்கின்றன. பல சரித்திர உண்மைகளை, நிகழ்வுகளை அவைகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலும் அந்தக் கல்வெட்டுக்களில், அந்தக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள் பொறிக்கப் பட்டிருக்கும். சில இடங்களில், வரலாற்றுச் செய்திகளும், அரசர் தம் நீதி நெறி முறைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஒரு கோயில் கல்வெட்டில், கொலை வழக்கு ஒன்றின் விசாரணையும் தீர்ப்புரையும் சொல்லப்பட்டுள்ளன.

ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பி ஆகிய இருவர் இருந்தனர். சிறிய சச்சரவு ஏற்பட்டது. வாய்ச் சண்டை, கைச்சண்டையாக மாறியது. தம்பி அடித்ததில், அண்ணன் இறந்து போனான். இந்த இரண்டு பேரின் தந்தையோ, இந்த விபரத்தைச் சபையோரிடம் புகார் செய்தான். மகாசபை இந்த வழக்கை, கோயில் மண்டபத்தில் வைத்து விசாரித்தது. விசாரணையின் போது,

சபையார் கேட்ட முதல் கேள்வி : உனக்கு, இந்த இரண்டு பேர் தவிர வேறு மக்கள் உண்டோ?

தந்தை: இல்லை ஐயா. மற்று மக்கள் ஆரும் இல்லை இவர்கள் தாயும் நானுமே உள்ளோம்.

சபையார்: உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள உங்களுக்குப் பொருள் (அர்த்தம்) வசதி உண்டா?

தந்தை : இல்லை ஐயா ; பொருள் வசதி ஏதும் கிடையாது.

இப்போது, வழக்கை விசாரித்த 'இராஜேந்திர சோழச் சித்திர மேழிப் பெருக்காளர் சபை' தனியாகக் கூடிக் கலந்தாலோசித்தது. ஒரு குடி கேடாகி விட்டது. கொலை செய்தவனுக்கு மரண தண்டனை தான் வழங்க வேண்டும். அதுவே நீதி. ஆனால் அவ்வாறு செய்தால், வயதான பெற்றோர்களைக் காப்பாற்ற ஆள் கிடையாது. ஆகவே மனிதாபிமானமாக ஒரு தீர்ப்புச் சொல்லப்பட்டது. அதன்படி, செய்த குற்றத்திற்குக் கழுவாயாக, அந்தக் கோயிலில் தினமும் அரை நந்தா விளக்கு ஒன்றைக் குற்றவாளியான தம்பி ஏற்றி வரவேண்டும். மேலும், வாழ்நாள் முழுவதும் வயதான தந்தையையும், தாயையும் காப்பாற்ற வேண்டும் என்று மகாசபை உத்தரவிட்டது. இந்த முடிவு பட்டாங்கு ஓலை என்ற பெயரில் ஆவணமாக எழுதப்பட்டது. வெள்ளாளர் பதின்மரும், வேறு சிலரும் இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டு உள்ளனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய அனைவரின் பெயர்களும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன-

சகோதரர்களின் பெயர்கள், சங்கரத்தடியன், பெரியான் என்பதாகும். தகப்பனார் பெயர் தருப்பேறுடையான் தாழிகோனன் என்பதாகும்.

கல்வெட்டு வாசகம் வருமாறு

''.... கங்கபுரத்திலிருக்கும் வெள்ளாளன் தருப்பேறுடையான் தாழிகோனன் வந்து என் மகன் சங்கரத்தடியனும் என்மகன் பெரியானும் சூடுபடுகிறடத்துத் தம்பியை தமையன் அரிசப்பட்டு அடித்தான், அடிக்க தம்பியும் தமையனையெதிரேயடித்தான் தம்பியடியிச்சஅடியிலே தமையன்பட்டான் என்று வந்து சொல்ல உனக்கு இவ்விருமருமல்லாது மக்களுள்ளரோ வென்று கேட்க மற்று மக்களாருமில்லை இவர்கள் தாயும் நானுமோ யுள்ளோமென்று சொன்னான் சொல்ல அர்த்தந்தானுண்டோவென்று கேட்க அர்த்தமுமில்லை என்றானென்ன ஒரு குடிக் கேடானமையிலும் இவர்களை ரக்ஷிப்பாரிலாமையிலும் அர்த்தம் இலாமையிலுந் திருத்தாமரைப்பாக்கத்துத் திருவக்னீஸ்வரமுடைய மஹாதேவர்க்குத் திருநந்தா விளக்காக அரைவிளக்கு வைத்து வயஸ்பரிணதை சென்ற தாயையுந் தகப்பனையும், ரக்ஷிப்பானாக தம்ம நோக்க இவனிதற்குப்படவேண்டா...''

இத்தகைய அருமையான தீர்ப்பு திருவண்ணாமலை மாவட்டத்தில், தாமரைப்பாக்கம் என்ற ஊரில் அமைந்துள்ள அருள்மிகு அக்னீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டில் உள்ளது.

இது போன்று, நமது கோயில் கல்வெட்டுக்களில் அரிய பல செய்திகள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்கள் சிதையுறாமல் காப்பாற்ற வேண்டியது நமது கடமையாகும்.

# சந்தனம் கொண்ட சுந்தரலிங்கம்



புலவர் வி. ராஜா, எம்.ஏ.



எல்லா சிவத்தலங்களிலும் நந்திதேவர் சிவனைப் பார்த்து அமர்ந்திருப்பார். நந்தி தேவரின் காதில், ஒரு கையால் ஒரு காதைப் பொத்திக் கொண்டு மற்றொரு காதில் பக்தர்கள் தங்கள் வேண்டுகோள்களைச் சொல்வார்கள்.

ஆனால் இங்கு நந்திதேவர் தனது திருமேனியினை சிவனுக்குப் பின்புறம் காட்டி கிழக்கு நோக்கி அமர்ந்திருப்பார்.

எல்லாக் கட்டிடங்களிலும் உறுதியான கல், மண் அல்லது மரம் போன்றவற்றால் மேற்கூரை அமையப்பெற்றிருக்கும். ஆனால் இத்தலத்தில் மட்டும் புன்மையான எருக்கஞ்செடி கொண்டு கட்டிடத்தின் மேற்கூரை தாங்கப்பட்டிருக்கின்றது.

எல்லாத் தலங்களிலும் சிவபெருமானின் லிங்கம் மற்றும் ஆவுடையார்க்கு அபிஷேகம் நடைபெறும்.

ஆனால் இத்திருத்தலத்தில் அடிப்பீட ஆவுடையாருக்கு மட்டும் அபிஷேகம் நடைபெறும். லிங்கப்பகுதி முழுவதும் சந்தனம் பூசப்பட்டிருக்கும். தினமும் பக்தர்கள் கொண்டு வந்து தரும் சுத்த சந்தனம் இறைவனுக்குச் சாற்றப்படுகிறது. சித்திரைச்சதயத்தின் முதல் இரண்டு நாட்களில் மட்டும் விங்கத்தின் மேல் சார்த்தப்பட்ட சந்தனம் நீக்கப்பட்டு இறைவன் காட்சி தருகிறார். மீண்டும் சித்திரை சதயத்தன்று சந்தனம் சார்த்தி இறைவன் சந்தனத்துடன் ஒரு வருடத்திற்குக் காட்சிதருவார்.

சிவலிங்க ரூபத்தின் பாணப் பகுதியில் மற்ற சிவலிங்கங்களைப் போல் இல்லாமல் தலைப் பகுதியில் சிறிது உள்வாங்கி இருக்கும்.

இத்தலத்து அம்பாள் ஞான சக்தியின் வடிவம் என்று அழைக்கப்படுகின்றாள்.

இத்தலம் முல்லைக் காடாக இருந்து இறைவன் காட்சி தந்ததால் திருமுல்லை வாயில் என அழைக்கப்படுகிறது. தஞ்சைமாவட்டத்தில் ஒரு தலம் இதே பெயரில் இருப்பதால் இங்கு இருக்கும்


திருமுல்லைவாயிலுக்கு வட திருமுல்லைவாயில் எனப் பெயராக அமைந்தது. தொண்டை நாட்டுப் பாடல் பெற்றத் தலங்களில் இதுவும் ஒன்று ஆகும்.

தொண்டைமான் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த மன்னன். அவன் நாட்டின் ஒரு பகுதியில் இருந்த புழல் கோட்டையில் ஓணன், காந்தன் என்னும் இரு அசுரர்கள் எருக்கந்தூணும், வெங்கலக் கதவும், பவழத் தூண்களும் கொண்டு கோட்டை அமைத்து பைரவ உபாசனை செய்துகொண்டு அமைதியான மக்களுக்கு அல்லல் கொடுத்து வந்தனர். அவர்களை அடக்க மன்னன் கிளம்பி வந்தான்.

சோழம்பேடு என்னும் இடத்தில் முகாம் இட்டிருந்த மன்னனுக்கு இரவில் வெங்கல மணி ஓசைகேட்டது. மன்னன் இது சிவாலய ஒலி என்பதை உணர்ந்து மறுநாள் யானை மீதேறிச் சென்றான். முல்லைக்கொடி படர்ந்து இருந்த வனத்தில் சென்ற போது யானையின் கால்களில் முல்லைக் கொடி சுற்றிக் கொண்டதால் யானையால் நகர முடியவில்லை. யானையிலிருந்த மன்னன் நெடிய வாளால் முல்லைக் கொடியை வெட்டவே, இரத்தம் பீறிட்டு அடித்தது. அதிர்ச்சியுற்ற மன்னன் கீழிறங்கி புதரை விலக்கிப் பார்க்க வெட்டுண்ட சிவலிங்கத்தின் பாணப் பகுதியில் இருந்து இரத்தம் பீறிட்டது. மிக்க துயரமுற்று சிவனுக்குத் தவறு செய்ததாக எண்ணி தன் வாளால் தலையை அறிந்து கொள்ளச் சென்றான். இறைவன் உடன் நேரிடையாகக் காட்சி தந்து ''மன்னனே நான் வெட்டுப்பட்டாலும் மாசு இல்லா மணியே ஆவோம். வருந்தற்க! எம் நந்தியை உமக்குத் துணை அனுப்புவோம். அழைத்துச் சென்று அசுரர்களை அடக்கி வருக என ஆணையிட்டார்.

ஆணையைத் தலைமேல் கொண்ட மன்னன் செல்லும் முன்னே அவன் புகழ் கேட்டு அடங்கிப் போயினர் அசுரர்கள். அவர்களது கோட்டையில் இருந்த எருக்கந்தூண்களை வெற்றிச் சின்னமாகக் கொண்டு வந்து இறைவனுக்கு படைத்தான் மன்னன்.

இறைவனின் லிங்கப் பகுதியில்



மன்னனின் வாளால் வெட்டுப்பட்டு பள்ளமான இடத்தில் இருந்து இரத்தம் கசிவதைத் தடுத்து நிறுத்த குளிர் சந்தனத்தைப் பூசினான். அந்நாள் சித்திரைச் சதய நாள் ஆகும். இரத்த கசிவும் நின்றது. இறைவனும் குளிர்ந்தார். (அன்று முதல் இன்று வரை இறைவன் மீது சந்தனம் சார்த்தப்பட்டு சித்திரை சதயத்திற்கு 2 நாட்கள் முன்பு களையப்பட்டு மீண்டும் சித்திரை சதயத்தன்று சார்த்தப்படுகிறது.)

முல்லைப் புதருக்குள் காட்சி தந்த மாசிலா மணீஸ்வரருக்கு ஆலயம் கருங்கல்லால் அமைத்தான். சன்னதியின் முன்புறம் 2 எருக்கந்தூண்களை மண்டபத்திற்கு முன்புறம் தாங்கக் கொடுத்தான். அரசன் திருப்பணி செய்தபோது, எதிரிகள் எவரும் திருப்பணியைத் தடுத்துவிடக் கூடாது என்பதற்காகக் கிழக்கே திரும்பி அமர்ந்து இருக்கின்றார் நந்தி தேவர்.

கஜபிருஷ்ட விமானம் என்னும் மாட விமானம் உள்ள சன்னதி அமைக்கப்பட்டு உள்ளது. சதுர பீடத்தில் மாசிலாமணீஸ்வரர் வெட்டுப்பட்ட உருவோடு காட்சி தருகிறார். வலப்புறம் ஞான சக்தி எனப்படும் கொடியிடை நாயகி (முல்லைக் கொடியிடையே காட்சி தந்த நாயகரின் துணைவி)க்கு என தனி சன்னதி அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நோக்கியுள்ள சன்னதிக்குக் கிழக்குப்புறம் வாயிலும், தெற்குப்புறம் ஐந்து நிலை ராஜகோபுரமும் அமைந்து உள்ளன.

தெற்கு ராஜகோபுரம் வழியாக உள்நுழையும் போது பிரசன்ன விநாயகரும், வலமாக வரும்போது கல்யாண மண்டபமும், அம்மண்டபத்தில் அம்பாள்

சன்னதியும் உள்ளது.

தலமரம் முல்லை ஆகும். உட்புறத்தில் ரசலிங்கம் வீரபத்திரர், நால்வர், விநாயகர், மகாலஷ்மி, பைரவர், அருணகிரி ஆகியோர் உள்ளனர்.

சமயக்குரவர்

சுந்தரமூர்த்தி நாயனார் திருமுல்லை வாயிலை அடைந்தபோது இப்பகுதியில் சைவ சமய உட்பிரிவைச் சார்ந்த பாசுபதர்கள் அதிகம் வசித்த பகுதியாக இருந்திருக்க வேண்டும்.

இறைவனின் வரலாற்றைக் கேள்விப்பட்டு தனது ஞானக் கண்களால் தரிசனம் செய்து உன்னைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை என்ற ஏக்கத்தில்

**''வாயினால் உன்னைப்**
**பரவிடும் அடியேன் படுதுயர் களைவாய்**
**பாசுபதா பரஞ்சுடரே!''**

எனப் பாடுகிறார்.

சுந்தரரைத் தவிர அருணகிரிநாதரின் திருப்புகழிலும் இத்தலமும் இறைவனும் போற்றப்படுகின்றார்.

**''எல்லை வாயற்கு மட்டுமேகில் வினையேகுமெனும்**
**முல்லை வாயற்குள் வைத்த முத்தி வித்தே''**

என்கிறார் இராமலிங்க அடிகள்.

இத்தலத்து இறைவி லதாமத்யாம்பாள், கொடியிடைநாயகி, கொடியிடையம்மன் எனவும், இறைவன் நிர்மலமணீஸ்வரர், பாசுபதேஸ்வரர், மாசிலாமணீஸ்வரர் எனவும் அழைக்கப் படுகின்றனர்.

வைகாசி விசாகத்தில் பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது.

வெள்ளிக் கிழமைகள் மற்றும் பௌர்ணமி ஆகிய நாட்களில் அம்பாளை வழிபடுவது சிறப்பாகக் கருதப்படுகிறது.

சென்னை சென்டரல் ரயில் நிலையத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் அம்பத்தூருக்கும், ஆவடிக்கும் இடையில் அமைந்துள்ள திருத்தலம், திருமுல்லைவாயில் அருள்மிகு மாசிலா மணீஸ்வரர் கோயில் திருத்தலம். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட திருமுல்லைவாயில் திருத்தலம் செல்வோம், இறையருள் பெறுவோம்.

## வாசகர் கருத்து

ஜூன் 2006 இதழில் வெளிவந்துள்ள "கண்ணபுரத்து கண்ணமுதே" எனும் கவித்துவமான தலைப்பில் வரையப்பட்ட திருக்கண்ணபுரம் எனும் பெயர் பெற்ற 108 திருப்பதிகளுள் ஒன்று என்ற சிறப்பு பெற்ற மகத்துவமான பெருமாள் சந்நிதியினை தரிசிக்க வைத்த கட்டுரை பரவச சிலிர்ப்பில் ஆழ்த்தி விட்டது. வண்ணப்படங்கள் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டன!

திரு. த. சத்தியநாராயணன், அயன்புரம்.

ஜூன் 2006 இதழில் வெளிவந்துள்ள வன விசேஷ நாமத் திருத்தலங்கள் தலைப்பில் "சுகவனம் - சேலம்" இடம் பெறவில்லை. சீலர்களால் சிறப்புப் பெற்ற திருத்தலங்கள் பட்டியலில் கீழ்க்கண்ட திருத்தலங்களை சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்.

1. சிறுத்தொண்டர் - திருச்செங்காட்டங்குடி
2. திருநாவுக்கரசர் - திருப்புகலூர்
3. மாணிக்கவாசகர் - ஆவுடையார் கோயில்

திரு. ஆர். சோமசுந்தரம்
ஸ்ரீ நாராயணசெட்டி சத்திரம்,
தோட்டப்பாளையம், வேலூர் - 4

ஜூன் 2006 இதழில் வெளிவந்துள்ள ''திருமந்திர உபதேசம்'', ''மனக்கோயில் கொண்ட மகாதேவன்'' மற்றும் ''தமிழ் நாட்டு சித்தர் பரம்பரை'' ஆகிய கட்டுரைகளில் எழுத்துப் பிழைகள் உள்ளன.

திருமந்திர உபதேசம் - ''கற்றாங் கெளியோம்பி'' என்பது ''கற்றாங் கெரியோம்பி'' என்றும்,

மனக்கோயில் கொண்ட மகாதேவன் - ''உள்ளப் பெருங்கோயில்'' என்பது உள்ளம் பெருங்கோயில் என்றும்,

தமிழ்நாட்டு சித்தர் பரம்பரை - ''அகத்தியர் கடலை உண்டது'' என்பது அகத்தியர் கலை உண்டது என்றும், ''விந்த மலை'' என்பது ''விந்திய மலை'' என்றும் வரவேண்டும்.

திரு. சிவகவி. இளம்பூரணன்
வளசரவாக்கம்
சென்னை - 87

நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி கருத்துக்கள் தெரிவித்துள்ள வாசகப் பெருமக்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்.

# கூடாரவல்லிக் குதூகலப் பாட்டு

தமிழாகரர் தெ. முருகசாமி, எம்.ஏ.பி.ஓ.எல்;
(முன்னாள் முதல்வர், இராமசாமி தமிழ்க்கல்லூரி,
காரைக்குடி)
புதுச்சேரி-9

கோகுலத்துக் குழந்தைகள் குதூகலமாகத் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனர். கண்ணன் ஒரு காலத்தில் வாமனனாக வந்து அளந்த ஓரடி மண்தானே இது என்ற நினைப்பு உண்டோ இல்லையோ மண்ணை மிதித்தும் துவைத்தும் சலனமற்று விளையாடிய விளையாட்டு அது. அவ்விளையாட்டின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தாண்டுதல், குதித்தல், ஓடிப்பிடித்தல், ஊஞ்சல் என விளையாட்டில் பலவகை இருந்தாலும் கோகுலத்துக் கோபியர்கள் இவற்றையா விளையாடினார்கள். இல்லை; அவர்கள் விளையாடியது பக்திப்பரவச சாமி விளையாட்டு.



எல்லாம் மண்ணில் தோன்றி மண்ணில் மறையப் போகின்றன என்பதை அறிந்தோ, அறியாமலோ அவர்கள் அப்படி ஒரு விளையாட்டை விளையாடிய போது, குவிந்த மண்தான் கோவிந்தனுக்குக் கோயிலானது. கோலிய மண்தான் கோயிலின் சுற்று மதில். உடைந்த மண்பாண்ட ஓடுகளில் ஒன்று, ஒரு காலத்தில் மண்ணை உண்ட மாபிள்ளையான பரந்தாமனானது. மற்றொன்றோ மகாலட்சுமி. இப்படியாக மண்ணும் ஓடும், பகவத் பரத்துவம் அடைந்துவிட்ட பிறகு துளசியும் தீர்த்தமும் சடாரியும் நைவேத்தியமும் பற்றிக் கூறுவானேன். எல்லாம் மண்ணே!

விளைவறியாத இந்தச் சின்னஞ்சிறுசுகளின் விளையாட்டைப் பார்த்து மகிழ்வோர்க்கெல்லாம் மண்தான் பிரசாதம். சாப்பிடும்போது கல்லோ, மண்ணோ இருந்தால் வெறுத்துத் துப்புகின்றவர்கள் அந்தக் குழந்தைப் பிரசாதத்தை மண்ணாக நினைக்காமல் மரியாதை நிமித்தமாக வாங்கிக் கொண்டார்கள். அது ஏன்? குழந்தைகளின் மனம் கோணக்கூடாது என்பதற்காகப் பெரியவர்கள்காட்டிய குழந்தை பாவனை அது!

உண்ணும் சோறும் தின்னும் வெற்றிலையும் பருகும் நீரும் கண்ணனாகவே கண்ட ஆழ்வாரின் நினைப்பின்றி விளையாடிய குழந்தைகளுக்கு மண், மண்ணாகத் தெரியவில்லை. ''தேவுமற்றறியேன் எனக் குருகூர் நம்பியையே தேவனாகக் கருதிய மதுர கவியாழ்வாரின் மயக்கம் மங்கையர்க்கு வந்து விட்டதுதான் வியப்பு'' எனப் பெரியவர்களெல்லாம் அக்குழந்தைகளின் விவேக விளையாட்டைக் கற்பனைப்படுத்தியதால் அவர்கள் ஏதும்குறுக்கிடவில்லை. அந்த அற்புத உணர்வில் குழைந்த குழந்தைகளின் இன்ப நினைப்புதான் அமுதப் பொங்கல் என நிஷ்காமியமாக உணர்ந்த ஆண்டாள், கிண்டிப் பரிமாறியதுதான் கூடாரவல்லிக் கூட்டாஞ் சோறு என்னும் பாவைப் பாடல்கள்.

அறிவு விசால மடைவதற்குத் துணை செய்யும் அந்த ஓசோன் காற்றுமண்டல வியாபகம் கூடிய மார்கழிமாதக் காலை நேரம். பகவத் காரியப் புண்ணியத்தால் கண்விழித்தாள் ஆண்டாள். தன்னைப் போல் பிறரையும் அந்த பகவத் கைங்கரியத்தில் ஈடுபடச் செய்ய வேண்டி ஒவ்வொரு வீடாக நடந்தாள். சில்லென்ற காற்று, நடுக்கும் குளிர், பனி வேறு கொட்டுகிறது.

வீட்டு வாயிலில் நின்று எழுப்பியவர்களின் கூப்பாட்டைக் கேட்ட கன்னிப் பெண்கள் வீட்டுக்குள் தூங்கியும் தூங்காமலும் விழித்தெழுந்து வந்து தெருவில் கூடிவிட்டார்கள். ஆமாம்! மார்கழி நோன்பு நோற்கப் போகும் அவர்களுக்குக் குளிர் ஏது? பனி ஏது? அந்தப் புலர்காலைப் பொழுதில் பாற்கடலில் பையத்துயின்ற பரமனைப் பாடிக் கொண்டே பீறிட்ட பக்தி வெள்ளக் குளத்தில் நீராடினார்கள்.

பரந்தாமனோடு கைகோர்த்துக் கொண்டு

கூட்டமாக நெய்ப் பொங்கல் உண்ண வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்தோடு அவனை எழுப்பவும் புறப்பட்ட ஆண்டாள் உள்பட பெண்கள் யாவரும், நெய்யுண்ணோம், பால் உண்ணோம் என்ற நாச்சுவை தவிர்த்த விரதக் கட்டுப்பாடுடன் கண்ணுக்கு மை பூசிக் கொள்ளாமலும், தலையில் மலர். சூடிக் கொள்ளாமலும், வாயால் நல்லன பேசும் தெய்வச் சிந்தனையுடன், கையால் சிறந்த தான தருமங்களைச் செய்ய முற்பட்டவராய் நாடு செழித்தால் நாமும் செழிப்போம் என்ற பொது நல நோக்கை மனதில் வரித்துக் கொண்டு தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்ய வேண்டி ஆழிமழைக் கண்ணனிடம் விண்ணப்பித்தாள்.

''நாராயணனே நமக்குப் பறை தருவான்'' என்ற ஆன்மீக நம்பிக்கைக்கான வியூகம் அமைத்துக் கொண்டு புறப்பட்டவர்களின் காதுகளில் பரந்தாமனது கையில் உள்ள பாஞ்சசன்னியம் போன்ற வெண்சங்கின் சீரான ஒலி திவ்விய தேசத்தின் (கோயிலின்) தெய்வ ஒலியாகக் கேட்டது. யோகிகளும் முனிவர்களும் கூறும் அரிஅரி என்ற பெயர் எங்கும் ஆர்ப்பரித்தன. இதற்கேற்ப நாராயணன் கருடன் மீது வந்து அருளுவான் என்ற நம்பிக்கையைத் தருவது போலப் புள்ளும் (பறவைகளும்) ஆனைச் சாத்தன் என்ற குருவிகளும் ஆரவாரித்தன.

இவையெல்லாம் நல்ல சகுனமாகத் தென்பட, அந்த அதிகாலையில் மாசுமறுவற்ற சுற்றுப்புறச் சூழலில் (No Any Pollution) கீழ்வானம் வெளுப்பது கூடத் தெரியாமல் பெரிய இடத்தில் உள்ளவர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களது வீட்டருகே சென்ற பெண்கள் பட்டாளம் ''ஐயகோ! இப்படியா தூங்குவது?'' எனக் கிராமத்துப் பாணியில் வார்த்தைகளை அள்ளி வீசித் தொடங்கி விட்டார்கள்.

தூக்கம் கவ்விக் கொள்ளும் அளவிற்குச் சுகமான மெத்தென்ற பஞ்சசயனப் படுக்கையும் தூக்கம் கெடாதிருக்கத் திவ்விய நறுமணப் புகையும் தூங்கத் தூங்க தூக்கம் தரவல்ல சுகயோகங்களாச்சே! தூக்கம் வராமல் என்ன செய்யும்? என்ற கிண்டலடிப்பான பேச்சும் தொடர்ந்தது.

பயனைத் துறந்து கடமையைச் செய்பவர்கள் எவருக்கும் அஞ்சவேண்டிய தேவையில்லை என்பதால் பெரிய இடமாயிற்றே என்றெல்லாம் எண்ணாமல் நந்தகோபாலனை, பலராமனை, யசோதையை, நப்பின்னையை வல்லூட்டியாக எழுப்பியே தீருவது என எழுப்பினர் பெண்கள்.

விழித்தெழப் போகும் அந்நால்வரிடமும் பெண்களுக்கு எந்தக் காரியமும் இல்லைதான் என்றாலும் பூசாரியில்லாமல் சாமி வரம் தரமாட்டார் என்பதால் அந்நால்வரையும்



எழுப்பியதால் கிடைக்கும் அனுமதியின் பேரில் அவர்கள் எழுப்ப வந்தது வடமதுரைக் கண்ணனையே என்றது வெளிப் படையாகத் தெரிந்து விட்டது.

ஆதலால் கண்ணாடி போன்ற கன்னத்தைக் காட்டிக் கண்ணனை எழுந்திருக்க விடாமல் மயக்கும் நப்பின்னையைக் கூவி அழைக்கும் பெண்கள், ''நங்காய் ! உக்கமும் தட்டொளியும் காட்டி உன் கணவனை எழுப்புக'' என உச்சி குளிர வேண்டினார்கள்.

ஆனால் கூட்டத் தலைவியான ஆண்டாளோ தன் தந்தை பெரியாழ்வார் அந்த வடபெருங்கோயில் உடையானுக்குச் சாத்த வைத்திருந்த துளவ மாலையைத் தான் அணிந்து கண்ணாடியில் அழகு பார்த்துக் களிக்கப் போகும் ருசிக்கு ஒத்திகை பார்ப்பதற்காகத் தனக்கு தட்டொளியும் (கண்ணாடி) தன்னைப் போன்ற பெண்கள் எப்போதும் கண்ணனுக்கு விசிறிகளே என்பதை அவனுக்கு உறுதிபடுத்தும் விதமாகப் பெண்கள் பொருட்டு உக்கமும் (விசிறி) கேட்பதாகத் த..க்குள் பாடிக் கொண்டாள்.

உக்கமும் தட்டொளியும் கேட்ட ஒலியில் தாமரைப் பூப்போன்ற கண்களை விழித்து நம்மைக் கண்ணன் எப்போது நோக்குவான் என ஏங்கிய பெண்கள் முன்பாக வேரிமயிர்ப் பொங்கும் சிங்க

ஏறாக விழித்தெழுந்து வந்தவன், சீரிய சிங்காதனத்திலிருந்து கொண்டு வந்தோரின் காரியத்தை ஆராயத் தொடங்கினான். பரந்தாமனைப் பார்த்த பரவசத்தில் பெண்களின் வேண்டுதல் பட்டியல் நீண்டது.

காப்பது விரதம் என்பதற்கேற்ப முன்பு விரதம் தொடங்கியபோது சூட்டிக் கொள்ளாமல் எடுத்து வைத்திருந்த சூடகம், தோள்வளை, காதுத்தோடு, காதுக்காப்பு, பாடகம் முதலியவற்றை அணிந்து கொள்ள அனுமதி கேட்டனர். ஏன் தெரியுமா? கூடாரை (பகைவரை) வெல்லும் கோவிந்தன் கூடினவரிடம் (நெருங்கியவரிடம்) அன்புக்குத் தோற்றுப் போகும் அடியவன் என்ற அவனது எளிவந்த திறத்தை (சௌலப்பியத்தை) உணர்ந்து கொண்டார்கள் என்பதால் வேண்டுவனவற்றைப் பெற ''குறையொன்றும் இல்லாத கோவிந்தா'' எனப் புகழ்ந்து அவனது அடிபற்றி மடிபறிக்கின்றனர்.

அதன் அடையாளமாகவே அறிவொன்றும் இல்லாத பெண்கள் எனத் தம்மைக் கூறிக் கொண்ட கோபியர் கூட்டத்துப் பெண்களுள் ஒருத்தியாகத் தன்னைப் பாவித்துக் கொண்ட ஆண்டாள், பாற்சோற்றில் நெய் ததும்ப ஊற்றிப் பொங்கும் இன்பப் பொங்கலுக்கு அன்பால் உலையேற்றிக் கிண்டிப் பொங்கியதும் அதைக் கூட்டமாய் இருந்து முழங்கையில் நெய் வழியுமாறு உண்ணும் நைவேத்தியத்திற்குக் கண்ணனைக் கட்டாயப் படுத்தி விடுகிறாள்.

ஆண்டாளின் அந்த அன்பு அழைப்பின் தொடர்ச்சியாக, ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம், உனக்கே ஆட் செய்வோம்'' என்று மானுட வாசனையற்ற ஆன்ம சாதனை வாசகமாக விரித்த அன்பு வலையில் சிக்கிய கண்ணன் செங்கண் மலர்த்தினான். மலர்த்திய அத்திருமுருகச் சிரிப்பில் தன் திருவருளைக் கொப்பளித்தான். அந்தஅருள் ஈரத்தில் நனைந்த பெண்களுள் ஆண்டாளே பாக்கியம் பெற்றவளாய் ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதற்கேற்ப அரங்கனோடு அனைவரும் ஐக்கியமாவதற்குத் துடிதுடித்து அழைத்த கூடாரவல்லிக் குதூகலப் பாட்டுதான் அவள் பாடிய திருப்பாவைப் பாட்டு.

# நந்தியை விலகச் சொன்ன சிவபெருமான் ''நந்தா உள்ளேவா'' என ஏன் அழைக்கவில்லை

பெ. இராமநாத பிள்ளை

ஆதனூரில் சிவபெருமானின் தரிசனம் கிடைக்காமல் தவித்த நந்தனாருக்கு சிவபெருமான் ''சற்றே விலகும் பிள்ளாய்'' என நந்தியை விலகச் சொல்லி, நந்தனாருக்கு சிவதரிசனம் காண்பித்தார்.

சிவபெருமான் நந்தியை விலகச் செய்து, தரிசனம் கொடுத்ததற்குப் பதிலாக, 'நந்தா உள்ளே வா' என திருக்கோயிலுக்கு உள்ளே நந்தனாரை அழைத்திருக்கலாமே! ஏன் அவ்வாறு செய்யவில்லை என ஆராயும் பொழுது ஆத்ம பக்குவம் வெளிப்படுகிறது.



இறைவன் ஒரு ஆத்மாவை அல்லது பக்தனை 'உள்ளே வா' என அழைத்துவிட்டால், மீண்டும் திருப்பி அனுப்பக் கூடாது. இறைவனோடு ஐக்கியமாவது தான் என்று முடிவு. அப்படி ஒரு நிலை வரவேண்டும் என்றால் அந்த பக்தனுக்கு எந்தவிதமான விருப்பமோ, ஆசையோ இருக்கக் கூடாது. அப்படி ஒரு விருப்பம் இருந்தால் அந்த நிறைவேறாத ஆசையோடு, விருப்பத்தோடு இறைவனோடு ஐக்கியப்பட முடியாது.

நந்தனாருக்கோ, சிதம்பரம் செல்ல வேண்டும் என்ற தீராத வேட்கை இருந்தது. அந்த விருப்பம் நிறைவேறினால் மட்டுமே, இறைவனோடு ஐக்கியப்பட முடியும்.

ஆதனூரில் நந்தனார் சிவதரிசனம் செய்யும் நாட்களில் அவருக்கு சிதம்பரம் செல்ல வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அது நிறைவேறாமல் இருந்தது.

இப்பொழுது அதாவது ஆதனூரில் நந்தியை விலகச் சொல்லாமல் 'நந்தா உள்ளே வா' என சிவபெருமான் அழைத்தால் அவரை ஆதனூரிலேயே ஐக்கியப்படுத்த வேண்டும். உள்ளே அழைத்தால் திருப்பி அனுப்பக் கூடாது. ஆனால் நந்தனாருள்ளே, அந்நிலையில் மனதில் சிதம்பரம் செல்ல வேண்டும் என்ற நிறைவேறாத விருப்பம் இருந்தது. நிறைவேறாத ஆசை, அல்லது விருப்பத்தோடு, இறைவனிடம் ஐக்கியப்பட முடியாது.

எனவே நந்தியை விலகச் சொல்லி, நந்தனாரின் பெருமையினை உலகிற்கு எடுத்துக் காட்டிய இறைவன், நந்தனாரின் சிதம்பரம் செல்லும் விருப்பத்தினை நிறைவேற்றி சிதம்பரத்திலே தன்னுடன் ஐக்கியபடுத்திக் கொண்டார்.

எனவே பக்தர்களின் எண்ணங்களை நிறைவேற்றிய பின்னரே, சிவபெருமான் பக்தர்களை தன்னோடு ஐக்கியப் படுத்துவார் என்ற சித்தாந்த உண்மையினை ஆதனூரிலே நந்தியை விலகச் சொல்லி நந்தனாருக்கு தரிசனம் கொடுத்தது அறிந்து மகிழத்தக்கது.



# தெய்வப் புலவரின் தெய்வ வழிபாடு

டாக்டர் அரங்க இராமலிங்கம், தமிழ்ப் பேராசிரியர்

அறிஞர் மிகப்பலர் உரை செய்த பெருமை திருக்குறளுக்கு உண்டு. தமிழறிஞர் மிகப்பலரால் ஆய்வு செய்யப்பெற்ற நூலாகவும், மேற்கோளாக எடுத்தாளப்பெற்ற நூலாகவும் திருக்குறள் திகழ்கிறது. அதிகமான அயல்மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற நூலாகவும், அறிஞர்கள் மற்றும் அருளாளர்களால் போற்றப்பெற்ற நூலாகவும் திருக்குறள் திகழ்கின்றது.

அவரவர் அறிதிறனுக்கேற்பப் புதுப்புதுப் பொருள்கள் ஊற்றெடுக்கும் தொட்டனைத்து ஊறும் மணற்கேணியாகத் திருக்குறள் பொலிகின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் திருக்குறளுக்கு அறிஞர்கள் அவ்வவ் காலகட்டத்திற்கேற்பப் புதுப்புது உரை வரைவதிலும், புதுப்புதுப் பொருள் காண்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர் - காட்டி வருகின்றனர். மெஞ்ஞானிகள் மெய்ப்பொருள் காண்பதில் களிப்படைகின்றனர். ஆதிமூலமாக, அகரப்பொருளாக, அறிவு மாணிக்கமாக ஒளிரும் அப்பொருளை மெய்ப்பொருள் என்றும் செம்பொருள் என்றும் போற்றியவர் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

இறை நம்பிக்கையுடைய தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளை மெய்ஞ்ஞானக் கண்கொண்டு ஆராய வேண்டும்.

தெய்வம்: *43, 50, 55, 619, 702, 1023*

இறை (இறைவன்) *: 388*

வானோர் (தேவர்கள்) *: 18, 25, 86, 346, 906, 1073*

வானகம் (தேவருலகம்) *: 50, 101, 247, 353*

புத்தேள் உலகு (வானுலகம்) *: 58, 213, 234, 290, 1323*

வானுலகத்தில் தெய்வம் தங்கியிருக்கும்: *50*

வீட்டுலகம் (வானோர்க்கு உயர்ந்த உலகம்) *: 24, 346*

திருமால் (உலகளந்த பெருமாள்) *: 610*

திருவைகுண்டம் (தாமரைக்கண்ணான் உலகு) *: 1103*

திருமகள் (இலக்குமி) *: 84, 167, 179, 617, 920*

திருமகளின் தமக்கை (மூதேவி) *: 167, 617, 936*

தெய்வமகள் (அணங்கு) *: 1081, 1082*

இந்திரன் (வானுலகத்தாரின் தலைவன்) *: 25*

நரகம் (இருள் சேர்ந்த இன்னா உலகம்) *: 243, 255*

பேய், பூதம் *: 271, 565, 850*

எமன் (கூற்றுவன்) *: 326, 1050, 1083, 1085*

எழுவகைப் பிறப்பு *: 62, 107, 126, 398*

காமக்கடவுள் (காமன்) *: 1197*

ஊழ் (விதி - வினை) *: 371 - 380 (பத்து குறட்பாக்கள்)*

இறப்பு என்னும் நிகழ்வு கொடுமையானது *: 230*

இறப்பு நிகழாமல் இருக்கச் சாவா மருந்து - அமிழ்தம் *: 82*

வானுலகத்திலிருந்து வழங்கப் பெறுவது - அமிழ்தம் *: 11*

உயிரைத் தளிர்க்கச் செய்வது - அமிழ்தம் *: 1106*

இறப்பு நிகழாமல் இருக்கப் பிறக்காமல் இருக்க வேண்டும்.

பிறப்பை அறுத்துவிட வேண்டும் *: 345, 349, 351, 356, 357, 358*

பிறவி நோய் *: 360 (பிறவியே ஒரு நோய்தான்)*

பிறவிக்கு வித்து ஆசை *: 361*

இறைவனிடம் பிறவாமையை வேண்ட வேண்டும் *: 362*

இனிப் பிறவாமல் இருக்க வழி யாது? நெறி யாது? *: 356*

மெய்ப்பொருளைக் கண்டால் பிறக்காமல் இருக்கலாம் *: 356*

மெய்ப்பொருளைக் காணலாம் *: 249, 355, 356, 423*

செம்பொருளைக் கண்டால் பிறவி இல்லை *: 91, 358*

மேற்சுட்டிய சான்றுகளிலிருந்து திருவள்ளுவருக்கு இறை நம்பிக்கையும் தேவர்கள் உறையும் தேவருலகம் பற்றியும் தெய்வங்கள் பற்றியும் நம்பிக்கை இருந்திருக்கிறது எனத் தெரிகிறது. திருமால் உலகளந்த நிகழ்வைக் குறிப்பிட்டும், திருமகளை ஐந்து இடங்களில் சிறப்பித்தும், மூதேவியை மூன்று இடங்களில் சுட்டியும், தெய்வங்களைப் பற்றியும் அவர்தம் புராணச் செய்திகளையும் குறிப்பிடுவதால் இவற்றைத் திருவள்ளுவர் அறிந்திருந்தார் எனத் தெரிகிறது.

வானோராகிய தேவர்கள் பற்றியும் (ஆறு இடங்கள்) வானுலகம் பற்றியும் (நான்கு இடங்கள்) புத்தேள் உலகு பற்றியும் (ஐந்து இடங்கள்) வீட்டுலகமாகிய மேலுலகம் பற்றியும் (இரண்டு இடங்கள்) நரகம் பற்றியும் (இரண்டு இடங்கள்) திருவள்ளுவர் குறிப்பிட்டிருப்பதையும் உணர்வுடையார் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

எழுவகைப் பிறப்புப் பற்றி நான்கு இடங்களிலும், இறப்பினை நிகழ்விக்கும் எமனைப் பற்றி (கூற்றவன்) நான்கு இடங்களிலும், பிறப்பை அறுப்பது பற்றி ஆறு இடங்களிலும், இனிப் பிறவாமல் இருக்கும் நெறி பற்றியும் திருவள்ளுவர் உரைத்திருப்பதை உணர்வுடையார் உணர்வர்.

தெய்வப்புலவரின் தெய்வ நூலான திருக்குறளுக்கு முகமாக இருப்பது பாயிரமாகிய முதல் நான்கு அதிகாரங்கள். முகத்திற்கு ஒளிதரும் கண்ணாக இருப்பது முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து. இம்முதல் அதிகாரத்தில் இறைவனுக்குரிய பெயர்களையும் பண்புகளையும் சுட்டியிருக்கின்றார்.

இறைவனுக்குரிய பெயர்கள்:

1. ஆதி - குறள் - 1
2. பகவன் - குறள் - 1
3. இறைவன் - குறள் - 5, 10

**இறைவனுக்குரிய பண்புகள்:**

1. வாலறிவன் (தூய ஒளி பொருந்திய அறிவு) - குறள் - 2
2. மலர்மிசைஏகினான் - குறள் - 3
3. வேண்டுதல் வேண்டாமை இலான் - குறள் - 4
4. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் - குறள் - 5
5. பொறிவாயில் ஐந்தவித்தான் - குறள் - 6
6. தனக்குவமைஇல்லாதான் - குறள் - 7
7. அறவாழி அந்தணன் - குறள் - 8
8. எண் குணத்தான் - குறள் - 9
9. பற்றற்றான் - குறள் - 350

கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ள பத்துக் குறட்பாக்களில் ஏழு குறட்பாக்களில் இறைவனின் திருவடியினைப் போற்றி வணங்குகிறார். திருவடியாகிய மெய்ப்பொருளைக் குரு முகமாக அறிந்தவர் பிறவிப் பெருங்கடலைக் கடந்தவர் ஆவார்.

தெய்வப்புலவர் ஐந்து உலகங்களைக் குறிப்பிடுகிறார். நாம் வாழும் உலகத்தினை இவ்வுலகம் (247) எனக் குறிப்பிடுகிறார். தெய்வங்கள் உறையும் வானுலகத்தினை (50, 58, 101, 247, 353, 213, 234, 290, 1323) அவ்வுலகம் (247) எனக் குறிப்பிடுகிறார். வானுலகத்தில் வானவரும், தெய்வங்களும் உறைகின்றனர். தேவர்களுக்குரிய இரண்டு பண்புகளைச் சுட்டி உரைக்கின்றார் திருவள்ளுவர். தாம் விரும்புகின்றவற்றைச் செய்து மனம் போன போக்கில் வாழ்பவர் (1073) என்றும் கண் இமைக்காதவர்கள் (இமையார் - 906) என்றும் குறிப்பிடுகிறார். இவர்களுக்குத் தலைவன் இந்திரன் (25). தெய்வம் (43, 50, 55, 619, 702, 1023) எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவது கடவுள் வாழ்த்தில் குறிப்பிடும் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கும் நிலையினர். தெய்வம் என்ற சொல்லைத் திருவள்ளுவர் கையாண்டிருக்கும் ஆறு குறட்பாக்களையும், நுணுகி நோக்குவார் இவ்வுண்மையை உணர்வர். எனவே வானவரும் தெய்வங்களும் வாழும் உலகம் வானுலகம் - தேவருலகம் எனச் சுட்டப் பெறுகிறது. இவ்வுலகினைப் புத்தேள் உலகம் என்றும் ஐந்து இடங்களில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.


இதற்கு மேல் இன்னொரு உலகம் (வீட்டுலகம்) இருப்பதாகத் தெய்வப்புலவர் குறிப்பிடுகிறார். வானோர்க்கும் உயர்ந்த உலகம் (346) என இம்மூன்றாவது உலகத்தினைக் குறிப்பிடுகிறார். தவம் செய்தவர்கள் நோன்பு நோற்றவர்கள் வானுலகம் செல்வர். யான் எனது என்னும் செருக்கு அறுத்தவர்கள், தேவர்களும் தெய்வங்களும் அடைய முடியாத வீட்டுலகத்தை அடைவர் என்கிறார். அறிவு என்னும் அங்குசத்தினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்க வல்லவர் எல்லா உலகங்களுக்கும் மேலான வீட்டு உலகத்திற்கு வித்துப் (24) போன்றவர் எனக் குறிப்பிடுகிறார்.

நான்காவதாகத் தாமரைக்கண்ணான் உலகு (1103) எனத் திருவள்ளவர் குறிப்பிடுவது திருமால் உறைந்து ஒளிரும் திருவைகுண்டம் எனக் கருதலாம்.

ஐந்தாவதாக ஓர் உலகத்தைக் குறிப்பிடுகிறார். இருள் சேர்ந்த இன்னா உலகம் (243) என்கிறார். இருள் செறிந்த துன்பமான உலகம் நரகமாக இருக்கலாம். உயிர் உண்ணும் கூற்றுவனைப் பற்றி நான்கு இடங்களில் குறிப்பிடுகிறார். இன்னா உலகம் புகல் (243) எனக் குறிப்பிடுவதால் உயிர்கள் நரகத்தில் சென்று புகுகின்றன - அடைகின்றன என்ற குறிப்பும் தொனிக்கிறது. தெய்வப்புலவர் குறிப்பிடும் இவ்வுலகங்கள் பற்றிய செய்திகளை ஆராய்ந்து அறிதல் அறிவுடையார் கடன்.

இந்த ஐந்து உலகங்களுக்கும் மேலாக உள்ள இடத்தில் தான் தெய்வப்புலவர் கடவுள் வாழ்த்தில் குறிப்பிட்டுப் போற்றியுள்ள இறைவன் இருக்கிறார் எனக் கருத இடமிருக்கிறது. இறைவனின் ஒளி பொருந்திய திருவடிகளைப் போற்றி மெய்ப்பொருளை வணங்குவதே கற்றதனாலாய பயன் (குறள்-2)

மனித உடம்பிற்குள்ளே உறைந்து ஒளிரும் மெய்ப்பொருளாகிய செம்பொருளைக் கண்டு வழிபடுவதே வழிபாடு. ஆடும்பாதம், தூக்கிய திருவடி, நற்றாள், ஓசைஒலியாகிய மண்தீண்டா பாதத்தை அறிவால் அறிந்து கண்ணால் கண்டு உணர்வால் உணர்ந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உருகி உருகி வழிபாடு செய்வதே தெய்வப் புலவரின் தெய்வ வழிபாடு.




# கேட்ட வரம் அருளும் கோட்டைமாரி

"ஓம் ஓங்கார ரூப ஓங்கார மந்தர ஓங்கார சக்திவாலை
ரீங்கார மந்திர ரீங்காரரூப ரீங்கார சக்திவாலை
ஆங்கார மிட்டு ஐங்கோணரூப அருள் ஞான சக்திவாலை
ஓங்காரமிட்டு உயர்ஞானமியும் முழுஞான சக்திவாலை"

திண்டுக்கல் நகருக்கு இப்பெயர் வருவதற்கு காரணமே இந்நகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சிறப்பு மிக்க மலைக்கோட்டைதான். இந்த மலைக்கோட்டை பார்ப்பதற்கு திண்டு போன்று காட்சியளிப்பதால் இந்நகரை திண்டுக்கல் என்று அழைக்க ஆரம்பித்தனர். புராண காலத்தில் பத்மகிரி, திண்டிச்சுரம், நெல்லிவனம் என்ற திருநாமங்களும் இந்நகருக்கு உண்டு. இம்மலையின் உச்சியில் பாண்டியர் காலமுறைப்படி கட்டப்பட்டு இருந்த ஆலயத்தை கி.பி. 1553ம் ஆண்டு விஜயநகர மன்னர் அச்சுததேவராயர் புதுப்பித்தார். கி.பி. 1605ம் ஆண்டு மதுரையை ஆண்டு வந்த முத்துகிருஷ்ணநாயக்கரால் மலையில் கோட்டை கட்டப்பட்டதாக வரலாறு. பின் ராணி மங்கம்மாள் காலத்தில் மலைமீது ஏறிச் செல்ல வசதியாக படிகளை செதுக்கி வைத்தார்.

இம்மலைக்கோட்டையின் கீழ் கிழக்குப் பகுதியில் இருந்த கவாத்து மைதானத்தில் (பேரேடு மைதானம்) மன்னர்கள் காலத்து ராணுவத்தினரால் ஒரு சிறு பீடமும், அதன்பின் திப்பு சுல்தான் காலத்தில் இருந்த ராணுவத்தினரால் அம்மன் மூலஸ்தான விக்ரகமும் ஸ்தாபிக்கப்பட்டது. அதுவே அவர்களுக்கு, காவல் தெய்வமாகவும் இருந்து வந்துள்ளது. அதுதான் தற்போது புகழ்பெற்று விளங்கும் ஸ்ரீகோட்டை மாரியம்மன் திருக்கோயில் ஆகும்.

அம்மனுக்கு எட்டு கைகள் காணப்படுகின்றன. வலது பக்கம் பாம்புடன் உடுக்கை, கத்தி, வேல், சூலாயுதம், இடது பக்கம் அரிவாள், வில், மணி, கிண்ணம் போன்றவை காணப்படுகின்றன.

கொடிமரம், கோபுரகலசம், மூலஸ்தான அம்மன் மூன்றையும் அலங்கார மண்டபத்தில் இருந்து ஒரே நேரத்தில் தரிசனம் செய்வது சிறப்பு

# கேள்வி - பதில்

கேள்வி : தேவாரத்தில் ஒரு திருப்பதிகம் ''விழாத்திருப்பதிகம்'' என வழங்கப் படுகின்றது? அப்பதிகம் எது? அருளிய அருளாளர் யார்?

பதில் : திருமயிலையில் திருஞானசம்பந்தர் அருளிய ''மட்டிட்ட புள்ளையங் கானல்'' எனத் தொடங்கும். திருப்பதிகம் ''விழாத் திருப்பதிகம்'' ஆகும். இப்பதிகத்தில் ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை தீப விழா, மார்கழி திருவாதிரை விழா, தைப்பூசவிழா, மாசி மகவிழா, பங்குனி உத்திர விழா, பொற்றாப்பு விழா, பெருஞ்சாந்தி விழா ஆகிய விழாக்கள் பற்றிய குறிப்புகள் வருவதால் இப்பதிகம் ''விழாத்திருப்பதிகம்'' என வழங்கப் படுகின்றது.

கேள்வி : முருகப் பெருமானுக்கு உரிய வாகனம் மயில்தானே! மயில் வாகனம் அன்றிப் பிற வாகனங்கள் முருகருக்கு உண்டா?

பதில் : முருகப் பெருமானுக்கு உரிய முதன்மை வாகனம் மயில் ஆகும்.

''ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே''

என்று அருணகிரிநாதரும், ''செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க'' (மஞ்ஞை - மயில்) என்று கச்சியப்ப சிவாச்சாரியாரும் அருளியிருப்பது கொண்டு முருகப் பெருமானுக்கு உரிய முதன்மை வாகனம் மயிலே என்று அறியலாம்.

மயில் வாகனம் அன்றி முருகப் பெருமானுக்கு யானையும், ஆடும் கூட வாகனங்களாக அமைந்து விளங்குகின்றன.

முருகன் யானைமேல் அமர்ந்து விளங்கும் நிலையில் கஜவாகனர் எனப் போற்றப்படுவார். முருகனின் யானை வாகனத்திற்குப் பிணிமுகம் என்பது பெயர்.

''ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'' என்பது திருமுருகாற்றுபடை.

நாரதரின் வேள்வியில் தோன்றி உலகங்களைத் துன்புறுத்திய ஆட்டுக்கிடாயினை வீரவாகு தேவரை அனுப்பிப் பிடித்துவரச் செய்து முருகன் அதன் மீது ஏறி எண்திக்கும் வலம் வந்தார் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

''நவையில் சீர் முனிவர் தேவர்
நயப்ப நாரதன் என்றுள்ளோன்
புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன் முன்னர் வேள்வி
அவர்புரி தவத்தின் நீரால்
அன்று தொட்டு அமல மூர்த்தி
உவகையால் அனைய மேடம்
ஊர்ந்தனன் ஊர்தியாக''

- கந்த புராணம்.

*****************************************************

அம்சமாகும். அத்தகைய அம்சத்தில் மூலவர் அம்மன் அமையப் பெற்றுள்ளது.

மாசி பெருந்திருவிழாவின் போது ஸ்ரீ கோட்டை மாரியம்மன் தசஅவதாரங்கள் எடுத்து உலாவருவது இத்திருக்கோயிலின் தனிச் சிறப்பாகும்.

ஆடிமாதத்தில் அம்மன் தரிசனம் மிகுந்த பலனைக் கொடுக்கும். ஆடி வெள்ளிக் கிழமைகளில் சுற்றுப்புற கிராம மக்களும், நகர மக்களும் பெருந்திரளாக வந்து அம்மனை தரிசிப்பார்கள். ஆடி 18ம் பெருக்கு, ஆடி அமாவாசை, ஆடிப்பூரம் அன்றும் திரளான மக்கள் இத்திருக்கோயிலில் வந்து கூடுவர். ஆடி 2வது வெள்ளி உற்சவம் வரை ஐந்து தினங்கள் வெகுவிமரிசையாக நடைபெறும்.

ஸ்ரீ கோட்டைமாரியம்மன் திருக்கோயிலின் முக்கிய விழாக்கள்

★ புரட்டாசி மாதம் நவராத்திரி கொலு உற்சவம் 11 நாட்கள் மிக சிறப்பாக நடைபெறும்.

★ கார்த்திகை மாதத்தில் வரும் ஒவ்வொரு சோம வாரத்திலும் 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

★ மார்கழி மாதம் தினசரி அதிகாலை பிரம்மமுகூர்த்தத்தில் திருவிளக்கு பூஜை மிக சிறப்பாக நடைபெறும். மார்கழி நிறைவு நாள் அன்று சுமார் 5000 பெண்கள் கலந்து கொண்டு பூஜை நடத்துவது கண்கொள்ளா காட்சியாகும்.

★ தைப்பூசத்தன்று இத்திருக்கோயிலின் தலைமையில் நகரில் உள்ள பிற திருக்கோயிலின் உற்சவ மூர்த்திகளுடன் 5 கி.மீட்டர் தொலைவில் உள்ள குடகனாறு அணைக்குச் சென்று புனித நீராடி மாலையில் மின்ஒளி அலங்காரத்தில் அனைத்து தெய்வங்களுடன் அம்மன் வீதி உலாவருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

★ மாசி பெருந்திருவிழா இத்திருக்கோயிலில் மிகப்பிரமாண்டமாக நடைபெறும். அம்மன் 13 நாட்கள் மின் அலங்காரத்திலும், பூ அலங்காரத்திலும் ரத வீதிகளில் உலா வருவது பக்தர்களை பரவசப்படுத்தும். ஜாதி, மத பேதமின்றி அனைத்து மக்களும் ஆலயம் வந்து அம்மனை தரிசனம் செய்வது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

★ வைகாசி மாதம் முதல் தேதியன்று பஞ்சப்பிரகார தினத்தில் அம்மன் புஸ்ப பல்லக்கில் வீதி உலாவருவது சிறப்பு அம்சம்.

★ உள்ளம் உருக வேண்டுபவர்களுக்கு தீராத நோய்களை தீர்க்கும் தெய்வமாகவும், வேண்டுவோர்க்கு வேண்டிய வரங்களை தந்து காத்தருளும் தெய்வமாகவும் விளங்குகிறாள் அன்னை கோட்டைமாரி. நாமும் கோட்டை மாரியை நாடி கோடி நலம் பெறுவோமே.

# இடருக்கு இடர் கொடுத்தவனும் இடர் பெயர்ந்த ராமனும்

அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில்
செங்கல்பட்டு



சனீஸ்வரன் இடர்விளைவிப்பவன் என்ற கருத்து பொதுவாக உண்டு. எல்லோருக்கும் ஏழரை ஆண்டுகள், லக்னத்தில் அமர்ந்து, ஆட்சி செய்து, இடர் கொடுப்பவன் சனீஸ்வரன்.

ஆனந்த ராமாயணத்தில் ஒரு வரலாறு சுட்டிக்காட்டப்படுகிறது.

அனுமனை சனி பிடிக்க வேண்டிய நேரம். அவரோ ராமன் கட்டளையை சிரமேற்கொண்டு இலங்கைக்குப் பாலம் கட்டும் பணியை மேற்கொண்டிருந்தார். அவரைப் பிடிக்க வந்த சனியிடம் சாதுர்யத்துடன் '' நீஎன்மேல் நின்றால் ராமனின் வேலை தடைப்படும். எனவே நீஎன் காலை உரிய காலம் வரை பிடித்துக் கொள்'' என்று சாமர்த்தியமாகப் பேசினார்.

சனியும் ஒப்புக் கொண்டு காலைப் பிடிக்க வரவே, அவரைக் காலடியில் அழுத்திக் கொண்டார் அனுமன். தன் பணியைத் தொடர்ந்தார். கால் அழுத்தத்தில் இருந்து வெளிப்பட முடியாத சனீஸ்வரன் இனிமேல் அனுமனின் பணிக்குக் குறுக்கே வரமாட்டேன். அனுமனையும் அவரது ராஜனான ராமனை வணங்குபவருக்கும் இடர் தர மாட்டோம் என ஒப்புக் கொண்ட பிறகே வெளிவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

அது முதல் ராமனை வணங்குபவர்களையோ அனுமனின் பக்தர்களையோ சனீஸ்வரன் பாதிக்க மாட்டார் என்ற நம்பிக்கை உண்டு. சனி உபாதை உள்ளவர்கள் அனுமனுக்கு பூஜை செய்வதும் உண்டு.

இந்த வரலாற்றுப் பிரதிபளிப்பு ஒரு சன்னதியில் உள்ள மூல விக்கிரகத்திலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இடர் தரும் சனிப்ரீதிக்காகவும், சனி தோஷத்திற்காகவும், செங்கல்பட்டு வேதாசல நகரில் உள்ள அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலில் அமைந்துள்ள இச்சன்னதியில் இடருக்கே இடர் கொடுத்தவன் என்ற முறையில் வழிபாடு நடத்தப்படுகிறது.

சன்னதியில் நடுநாயகமாக அனுமன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இடப்புறம்



முகம் திரும்பி, வலக்கையில் அபயம் காட்டி, வலக்காலை தரையில் ஊன்றி, இடக்காலை சனீஸ்வரன் மீது வைத்து அழுத்தும் பாவத்தில் காட்சி தருகிறார் அனுமன். சனீஸ்வரனோ காலடியில் இருகை கூப்பி தலை குப்புறக் கிடக்கிறான்.

இந்த சன்னதியில் மூலவர் மட்டும் வித்தியாசப்பட்டது என்று கருதினால் தவறு என்பதை இத்திருக்கோயிலின் வரலாறு குறிப்பிடுகின்றது.

செங்கல்பட்டு கோதண்டராமர் திருக்கோயில் தற்போது இருக்கும் இடத்தில் முன்பு இல்லை. தற்போது இரயில் நிலையம் உள்ள இடத்தில் (மலை நீரையும் இதர பகுதி நீர்களையும் கொள்ளும் ஏரியாக இருக்கும்) கொள்வாய் ஏரிக்கரையில் இருந்து உள்ளது. அங்கு இருந்த கோட்டையில் இருந்த ராமர் மற்றும் ஆஞ்சநேயர் சன்னதிகள் நீர்ப்பிடிப்புப் பகுதியில் அடிக்கடி அமிழும் நிலை ஏற்பட்டதால் நீர் உள்ளுக்குள் ஏறி, எப்போதும் சென்று வணங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளத்தில் இருப்பதால் அடிக்கடி நீர் பிடிக்கின்றது எனக்கருதி மிக மேடான இப்பகுதியில் ஊர் மக்கள் 1885ம் ஆண்டு திரு. கிருஷ்ண நாயுடு என்பவர் தலைமையில் ஒன்று கூடி மாற்றி அமைத்துக் கட்டியுள்ளனர்.

கட்டும் போது அங்கு இருந்த ஒவ்வொரு கருங்கல் துண்டுகளின் பக்கத்திலும் கற்களை பக்கம், வரிசை, எண்கள் எண்ணிட்டு பிரித்து மூலவரையும் பெயர்த்து எடுத்து வந்து கட்டியுள்ளனர். அந்தக் குறிப்பிட்ட எண்ணும் இன்றும் அழியாமல் கல்லில் உள்ளது.

இத்திருக்கோயிலில் வரதராஜப் பெருமாளை தெற்கு முகமாக எழுந்தருளச் செய்து, தனிக்கோயில் நாச்சியாராக பெருந்தேவித் தாயாரையும் கிழக்கு முகமாக எழுந்தருளச் செய்து தனி சன்னதிகளில் காட்சி தருகின்றனர்.

அதன் பின்னர் குடமுழுக்கு செய்து உள்ளனர். இத்தகவல்கள் கிழக்குப் பக்க கோபுர நுழைவாயிலில் வடக்குப் பக்கச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்தியால் அறிய முடிகிறது.

1887ல் இந்தியா வெள்ளையர் ஆட்சியில் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்த நேரம். அப்போது ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணியாரின் 50வது ஆண்டு நிறைவு, வெள்ளையர் கொடி பரவியிருந்த இடம் முழுவதும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது.

16-2-1887ம் தேதியில் கோயிலை எடுத்துக் கட்டிய கிருஷ்ண நாயுடு அவர்களும், செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் ரீடராய் இருந்த குப்புசாமி நாயுடுவும் சேர்ந்து, 70 பொன் காசுகளால் ஆன ரூ.300/- (அப்போது) மதிப்புள்ள பொன் காசுமாலையை ஐம்பதாவது ஆண்டின் பெருமையைக் கொண்டாடும் வகையில் இதை சமர்ப்பித்து உள்ளார்கள்.

இந்தச் செய்தியைக் கூறும் வெள்ளிப் பட்டயம் முன் வாயிற் கதவில் பொறுத்தப்பட்டு இருந்து, கதவைச் சுத்தப்படுத்தும் போது பெயர்த்து எடுக்கப்பட்டு தொல்பொருள் துறையில் பதிவு செய்யப்பட்டது.

கருவறையில் பட்டாபிஷேக ராமர் கோலத்தில் பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார்.

ராமர் வீராசனத்தில் ஞான முத்திரை காட்டி, சீதையுடன் அமர்ந்து இருக்கின்றார். இலக்குவனும் பரதனும் ஒருபுறமும் எதிரில் சத்ருகனனும், ராமர் திருவடியின் அருகில் வலப்புறம் அனுமன் வணங்கிக் கொண்டும் காட்சி அளிக்கின்றார்.

சனீஸ்வரருக்கு இடர் தந்த அனுமனும், இடம் மாறிய ராமரும் உள்ள இத்திருக்கோயில் செங்கல்பட்டு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற திருத்தலமாக விளங்குகிறது.

- தமிழ் மாறன்

# எட்டும் சிவபெருமானும்

சிவமஞ்சரி செம்மல் பூசை ச.அருணா வசந்தன்

சிவபெருமானின் இயற்கைத் திருமேனிகள் - 8. அவை அஷ்ட மூர்த்தங்கள் எனப்படும், 1.நிலம், 2.நீர், 3.தீ, 4.காற்று, 5.வானம், 6.சூரியன், 7.சந்திரன், 8.ஆன்மா (எஜமானன்)

எட்டு வடிவங்களின் பெயர்களால் எட்டு சிவலிங்கங்கள் எட்டு தலங்களில் அமைந்துள்ளன. அவை அஷ்ட மூர்த்தங்கள் எனப்படும்.

1. மண் லிங்கம் - திருவாரூர்
2. நீர் லிங்கம் - திருவானைக்காவல்
3. அக்னி லிங்கம் - திருவண்ணாமலை
4. ஆகாய லிங்கம் - சிதம்பரம்
5. சந்திரலிங்கம் - மதுரை
6. காற்று லிங்கம் - திருக்காளத்தி
7. சூரிய லிங்கம் - திருச்சிராப்பள்ளி
8. ஆன்மலிங்கம் - திருப்பெருந்துறை

சிவனுக்குரிய சிறப்பான திருப்பெயர்கள் - 8

1. ஓம் உமாமகேஸ்வராய நம
2. ஓம் பரதேவாய நம
3. ஓம் திரியம்பகாய நம
4. ஓம் சோமசுந்தரேசாய நம
5. ஓம் சர்வாய நம
6. ஓம் பீமாய பீடம்
7. ஓம் மஹாபவாய நம
8. ஓம் நீலகண்டாய நம

சிவபெருமானின் குணங்கள் - 8

1. தன் வயத்தனாதல் (சுதந்தரன்)
2. தூய உடம்பை உடையவனாதல் (விருத்த தேகன்)
3. இயற்கை உணர்வினன் ஆதல்
4. முற்றும் உணர்தல்
5. பாசங்களிலிருந்து நீங்கி நிற்றல்
6. பேரருள் உடையவனாக இருத்தல்
7. முடிவில்லாத ஆற்றலுடைமை
8. வரம்பிலா இன்பம் உடைமை

சிவபெருமான் வீரச்செயல்களை புரிந்த அட்ட வீரட்டனத் தலங்கள் - 8:

திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருக்கடவூர், திருவழுவூர், கொருக்கை.

அஷ்டபாகு - சிவபெருமான் 8 தோள்கள் கொண்டவர்

டமருகம், மணி, கேடயம், கத்தி, சூலம், தழல்வடிவங்கள், வேதாளம், கபால பாத்திரம்

# கலங்கிப் பின் தெளிந்தார்

இயற்பகை நாயனாரிடம் சிவனடியாராக வந்த சிவபெருமான், நாயனாரிடம் ''உன் மனைவியை என்னோடு அனுப்ப வேண்டும்'' எனக் கேட்ட உடனேயே எவ்வித தயக்கமும் இன்றி, தன் மனைவியை வந்திருந்த சிவனடியாரோடு அனுப்புவதற்கு உடன்பட்டு, மனைவியை வந்த அடியாரோடு அனுப்பத் துணிந்து விட்டார். (வந்தது சிவபெருமான் என்பது நாயனாருக்கு அந்நிலையில் தெரியாது.)

மனைவியை அடியாரோடு அனுப்புவதற்கு சம்மதம் தெரிவித்த இயற்பகை நாயனாரின் வார்த்தையினைக் கேட்ட, அவருடைய மனைவி ஒரு கணம் மனதில் கலங்கினார். பின்னர் ஒரு தெளிவிற்கு வந்து அடியாரோடு கணவனின் உத்தரவுப்படி செல்லவும் செய்தார்.

இயற்பகை நாயனாரின் மனைவி கணவனின் வார்த்தையைக் கேட்டு ஏன் கலங்கினார், பின்னர் ஏன் தெளிந்தார், என்பதினை ஆராயும் பொழுது, அம்மையாரின் பெருமை விளங்கும்.

சிவனடியாரோடு, உடனே செல்ல வேண்டும் என்ற வார்த்தையினை இயற்பகை நாயனார் கூறக்கேட்ட அவருடைய மனைவியார், சற்று கலங்கினார். ஏன்?

கணவனின் கட்டளைப்படி சிவனடியாரோடு செல்லும்பொழுது, தினந்தோறும் தன் கணவராகிய இயற்பகை நாயனாருக்கு சிவபூஜையில் செய்ய வேண்டிய பணிவிடைகளை தான் உடனிருந்து செய்ய பாக்கியமில்லையே என்று நினைத்து கலங்கினார்.

பின்னர் தன் கணவன் எந்த முடிவு எடுத்தாலும் அது நல்ல முடிவாகவே இருக்கும் என்பதால் தெளிவு ஏற்பட்டு தெளிந்தார்.


சிவனடியார் முன்பின் தெரியாதவர். அவரோடு, 'நீசெல்' என தன் கணவன் வாயினாலே சொல்ல கேட்டதால் கலங்கவில்லை; கணவனுக்கு இனிமேல் தொண்டு செய்ய முடியாமல் போய்விடுமே என நினைத்து கலங்கினார். பின்னர் கணவனின் கட்டளைக்கு கீழ்படிதலே சிறப்பு, என நினைத்து தெளிந்தார். சேக்கிழாரின் 'கலங்கி பின் தெளிந்தார்' என்ற சொல்லாட்சி ஒவ்வொன்றும் ஆராய்ந்து மகிழத்தக்கது.

# திருமந்திர உபதேசம்

டி.வி.வெங்கட்ராமன்,இ.ஆ.ப.,(ஓய்வு)

''வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்
தோயம தாய்எழுஞ் சூரிய னாமே''

(திருமந்திரம் 116)



''மெய் என்னும் கோயில்'' என்றார் திருமூலர். மெய் என்ற சொல் தமிழுக்கே சொந்தமானது. தமிழ் அகராதி அந்த சொல்லுக்கு எத்தனை பொருள் தருகிறது. மெய் என்றால் உண்மை; உடல் ; உணர்ச்சி; மார்பு ; ஒற்றெழுத்து; ஆன்மா என்று தெரிந்து கொள்கிறோம். தமிழ் எழுத்துக்கள் உயிரையும், மெய்யையும் கொண்டவை. வேறு எந்த மொழியிலும் இது போன்ற நுட்பம் கிடையாது. உயிர் எழுத்து மெய் எழுத்துடன் கலந்து உயிர்மெய் எழுத்தாகிறது. உயிர், மெய்யில் பரவப் பரவ மெய்யும் உணர்வினைப் பெறுகிறது. இல்லையென்றால் அங்கே பொருள் கிடைக்காது. பொருள் இல்லையென்றால் மொழி இல்லை. எண்ணங்கள் வகைப்பட வழியில்லை. எண்ணங்கள் உருவாவதற்கும் வாய்ப்பில்லை. ஆகவே, நமது தமிழ்ச் சான்றோர் மெய்யெழுத்தில் உயிரைக் கொடுத்தார்கள். அப்போதுதான் பொருள் பிறக்கும். பொருள் பிறந்தால் மொழிக்கு நடையும் நோக்கமும் கிடைக்கும். மெய் எனும் எழுத்தைப் போலவே தான் மெய் எனும் உடலும். இறைவனுடைய படைப்புகளிலே உடலும் ஒன்று. உடலும் அதனைச் சேர்ந்த கருவிகளும் சடப் பொருள்கள். அவைகளுக்கு அறிவு என்பது கிடையாது. இறைவன் ஏன் அவற்றைப் படைக்கின்றான். அங்கே உயிர் இடம் பெறுவதற்காக. உயிர் ஒரு அறிவுப் பொருள். ஒரு சடப்பொருளையும், ஒரு அறிவுப் பொருளையும் இறைவன் சேர்க்கின்றான். இரண்டும் ஒன்றுக் கொன்று முரணானவை. இருந்தாலும் இறைவன் அவற்றைச் சேர்க்கின்றான். அதுதான் படைப்பு. இறைவன் உயிரைப் படைக்கவில்லை. அது அனாதிப் பொருள். கருவறையிலே, உடலையும், உயிரையும் சேர்ப்பதுதான் படைப்பு. இதை இறைவனுடைய விளையாட்டு. ஏன் இறைவன் இவ்வாறு செய்கிறான்?

உடல் இன்றி உயிருக்கு அனுபவம் இல்லை. அனுபவத்தின் வழியாகத்தான் உயிர் முன்னம் பிறவிகளில் தான் செய்த வினைகளின் பயனைத் தீர்க்கின்றது. அதற்கு உடல் தேவையா? தேவைதான். உயிர் ஒரு அறிவுப் பொருள், உணர்வுப் பொருளாக இருந்தாலும், தான் சார்ந்ததன் வழியாகத்தான் அனுபவங்களைப் பெறுகிறது. இங்கே உடலோடு சேர்ந்து கொண்டு, தன்னை உடலெனக் கருதிக்கொண்ட உடல் வழியாகப் பெறும் இன்ப துன்பங்களையெல்லாம் தான் பெற்றதாகவேக் கருதுகிறது. இந்த நிலையை அறியாமை என்று சான்றோர்கள் விளக்கினாலும் இந்த செயல்பாடுகள், முன்னம் விளைவுகளைத் தீர்த்துக்கொள்ள உதவுகின்றன. உடலால் உயிர் உணர்வு பெருகிறது. உயிரால் உடல் எழுச்சி அடைகிறது.

உயிர் பிறவித் துன்பத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். ஆனால் உடலின் துணையின்றி இது நடக்காது. இதுதான் இறைவனுடைய படைப்பின் விந்தை.

திருநாவுக்கரசர் தில்லைக்கு முதன் முறையாக விஜயம் செய்த போது, அவர் மனதில் இருந்த எண்ணம் இதுதான்.

''ஊனாலும், உயிராலும் உள்ள பயன் கொளநினைந்து
தேன் ஆகும் கலர்ச் சோலைத் திருப்புலியூர்மருங்கு அணைந்தார்''

என்று சேக்கிழார் பெருமான் அருளிச்செய்கிறார்

அந்த எண்ணத்தின் விளைவாக, அவருடைய உள்ளத்தில் வேறொரு ஆர்வமும் தோன்றுகிறது. உயிர் உடலில் புகுந்து, இறை நாட்டம் உடைய முதிர்வு நிலையிலே, உடலை, அன்பை வளர்க்கும் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறது. அன்புப் பெருக்கம் உடலிலே தோன்றி, உள்ளத்திலே நிறைந்து, உயிரையும் இன்பத்தில் ஆழ்த்துகிறது. அன்பும் இன்பும் ஒன்றையொன்று இப்பிறவியிலேயே வளர்த்துக்கொள்ள உடல்-உயிர்சேர்க்கை உதவுகிறது.

''என் அன்பு ஆலக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே''

என்று திருநாவுக்கரசர் அருளிச்செய்கிறார்

ஆகவே, மெய் என்றால் உடல் என்பது ஒரு நிலை. உயிர் என்பது இன்னொறு நிலை. மெய் என்றால் உண்மை என்ற பொருளும் நமக்குக் கிடைக்கின்றது. ''மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்கிறார் திருவள்ளுவர் பெருந்தகை. மெய்ப்பொருள் என்றால் கடவுள் என்பதை விட

ஒரு பொருளில் அழுந்தி அதன் உண்மைத் தன்மையைக் கண்டு அறிதல் என்று கொள்வது பொருத்தமாயிருக்கும்.

உடல் என்பது உண்மை. இன்றைய விஞ்ஞானிகள் கூறுவது போல உடல் தானே இயங்குகிறது. அதை வேறொரு ஆற்றலும் இயக்கவில்லை என்று கருதுவது, மேலெழுந்த வாரியாகப் பொருள் கொள்வதாகும். உடலும். உயிரும் சேர்ந்து இயங்குகின்றன என்று கருதுவது நாம் நம்முடைய தெளிவை மேலும் சற்று வளர்த்துக் கொள்வதாகும்.

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''

என்கிறார் திருமூலர் (மந்திரம் 724) இது சேர்ந்து இயங்கும் தன்மையைக் காட்டுகிறது.

இது முடிவான உண்மையா? இல்லை என்பார் திருமூலர் ''உடம்பினை முன்னம், மலம் நிறைந்த அழுக்குப் பொருள் என்று கருதிக் கொண்டிருந்தேன், நான் பெற்ற தெளிவின் விளைவாக, உடம்புக்குள்ளே, போற்றுதலுக்குரிய பொருள் ஒன்றைக் கண்டேன். உடம்பு ஒரு கோயில் என்று தெரிந்து கொண்டேன். இறைவன் இருக்குமிடம் கோயில், இறைவன் என்னுள் குடிகொண்டுள்ளான் என்று தெரிந்து கொண்டபின் உடம்பினை நான் மதிக்கத் தொடங்கினேன். வளர்க்கவும் செய்கிறேன்'' என்கிறார் திருமூலர்.

''உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே வுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''
(திருமந்திரம் 725)

உடம்புக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டுள்ளான். இம் உருபொருள் என்கிறார் திருமூலர். உருபொருள் என்றால் தானே வந்தடையும் பொருள் என்பது விளக்கம் அவன் வந்திருப்பது நமது விருப்பத்தை ஒட்டியல்ல, விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் எல்லா ஆன்மாக்களிலும், உயிருக்கு உயிராக அமர்ந்திருப்பவன் இறைவன். ஆகவே உடம்பெல்லாம் கோயில்

''உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்'' என்கிறார் திருமூலர்.

உள்ளம் என்றால் மனம். ஆன்மா என்ற பொருளும் உண்டு. பெருங்கோயில் என்பது கருவறை என்ற கர்ப்பக்கிரகம். இறைவன் அமர்ந்துள்ள இடம். மனம் என்றாலும், இதயம் என்றாலும் ஒன்றே எனக் கொள்ளலாம். உடம்பின் இதயமாகிய ஆன்மா எனப்படும் கர்ப்பக்கிரகத்தில் இறைவன் வீற்றிருக்கின்றான் என்று தெளிய வேண்டும். ஐம்பூதங்களால் ஆகிய உடலும், கருவிகளும் பெருங்கோயிலின் வெளிப்புற அமைப்புகளாக அமைகின்றன. இதைத் தெரிந்துக் கொண்டவர்களுக்கு சீவன் வேறு, சிவன் வேறு என்பதல்ல.

''தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம்'' என்றார் திருமூலர்.

தெளிவு என்பது அறிவு. இந்த அறிவும் உணர்வும் ஒன்றே. மனம், புத்தி. சித்தம் ஆகியவற்றால் அறியப்படும் அறிவல்ல அவற்றை ஒதுக்கி. இறைவன் திருவடிசார்ந்து கிடைக்கும் உணர்வு நிறைந்த அமைதியில் பெறப்படும் அறிவு. தெளிவிலே பிறக்கும் நீர் போல் இருக்கும் சிந்தை. ''நினைப்பற நினைந்தேன்'' என்றார் மாணிக்கவாசகப் பெருமான். தெளிந்த சிந்தையும் சிவனும் ஒன்றே என்கிற பொருள் படக் கூறுகிறார் திருமூலர். அத்தகைய சிந்தையிலே சிவனும் வெளிப்படுவான் என்கிறார். அங்கே சிவன் குடியிருப்பதை அருளாளர்கள் கண்டு இன்புறுவார்கள்.

''சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந்தானே''
(திருமந்திரம் 2855)

இறைவனுக்கு நாமெல்லாம் அடிமைகள். அவனது படைப்புகள் எல்லாம் அவனுடைய உடைமைகள். இந்தப் பிரபஞ்சமெல்லாம் அவனுடையது என்கிறது ஈசா உபநிடதம். அவன் சர்வ வியாபி. எங்கும் எதிலும் இருப்பவன். உயிருக்கு உயிராகவும். தோன்றாத்துணையாகவும், உயிரை நடத்திச் செல்பவனும் அவனே.

''குடியிருந்த கோள் நந்தி'' என்கிறார் திருமூலர். பல்லூழிகாலமாக இவ்வாறு இருக்கிறான். அதனால் ''குடியிருந்த'' என்றார். ஆகவே, பிற சமயங்கள் சொல்வது போல் அவன் நமக்கு அப்பால் பட்டவன் அல்ல. நமக்காவும் இருக்கின்றான்.

(தொடரும்)


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - அகத்தியர்

''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா. செல்வக்கணபதி

அகத்திய மாமுனிவர் குறித்த வேறு பல சுவையான தகவல்களும் கிடைத்துள்ளன. இவற்றை முதலில் பகிர்ந்து கொண்டு, அகத்தியர் நூல் ஆய்வுக்குச் செல்லலாம்.

தமிழ் நூல்களிலும், சைவ இலக்கியங்களிலும் , தலபுராணங்களிலும் அகத்தியர் குறித்த ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன.

அகத்தியரோடு தொடர்புடைய பல நூல்கள் குறித்த பதிவுகள் தமிழிலும், இந்திய மொழிகளிலும் காணக் கிடைக்கின்றன.

அகத்தியம் என்ற தொல் இலக்கண நூல் ஒன்று முன்னரும் குறிக்கப் பெற்றது. இஃது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்தும் கொண்ட முதல் தமிழ் இலக்கண நூல்.

ஒரு நட்சத்திரத்திற்கு ''அகத்திய நட்சத்திரம்'' என்ற பெயர் உண்டு. இது கடல் அலையை நிறுத்தவல்லது.

''அகத்திய பக்தவிலாசம்'' என்ற வடமொழி நூல் ஒன்று உள்ளது. இது சிவனடியார்கள் சரிதை கூறுவது.

ஒரு சிறு மலைக்கு ''அகத்திய பர்வதம்'' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது காலாஞ்சர பர்வதத்தின் அருகில் இருப்பதாகக் குறிக்கப் பட்டுள்ளது.

''அகத்தியப்பிராதா'' என்பவர் அகத்தியரின் உடன் பிறந்தவர். வயிற்றில் இருக்கும்போதே இவர் ஞானம் எய்தினார்.

''அகத்திய வடம்'' என்பது இமயமலைச் சாரலில் உள்ள ஒரு தீர்த்தம்.

''அகத்திய வேளாளன்'' என்பான் அகத்தியரால் செய்யப்பட்ட மருத்துவ நூல் ஒன்றை மேலும் விரித்து உரைத்தான்.

இவையன்றித் தமிழ்நாட்டுச் சிவ தல புராணங்கள் மேலும் பல தகவல்களை அகத்தியர் வரலாறு குறித்து வழங்கியுள்ளன.

தமிழ் நாட்டை முருகப்பெருமான் அகத்தியருக்கு வழங்கினார். அவர் அதனைப் பாண்டியன் ஒருவனுக்கு வழங்கினார் என்கிறது நெல்லைத் தலபுராணம்.

தாமிரபரணி நதியைச் சிவபிரான் அகத்தியருக்கு வழங்கினார் என்ற ஒரு குறிப்பும் உள்ளது.



இராமபிரானுக்கு அகத்தியர் தம் ஆசிரமத்தில் விருந்தளித்து உயர்ந்த படைக் கலன்களை வழங்கி, அவற்றின் வரலாறுகளை எடுத்துரைத்ததோடு, அவற்றைச் செலுத்துவதற்குரிய மந்திரங்களையும் தெரிவித்தார் என்கிறது இராமாயணம்.

இந்திரன் வேண்டுகோளை ஏற்று, அகத்தியர் கமண்டலத்தை கவிழ்த்துக் காவிரி நதியைத் தமிழ்நாட்டில் பெருக்கெடுக்க, விநாயகப் பெருமான் அருள் பாலித்தார் என்கிறது கந்தபுராணம். இதனைச் சிவப்பிரகாசசுவாமிகளும் பிரபுலிங்க லீலையில் வழிமொழிகிறார்.

திருக்குற்றாலத்தில் நிலவிய வைணவ ஆலயத்துள், திருமண் அணிந்து, வைணவ வேடந் தாங்கிச் சென்று, விஷ்ணு மூர்த்தியைச் சிவமூர்த்தியாகக் காட்சி தரத் தியானித்துத் தம் கைகளால் திருமேனி தீண்ட விஷ்ணு மூர்த்தி சிவமூர்த்தியாகக் காட்சி தந்தார் என்கிறது திருக் குற்றாலத் தலபுராணம்.

முருகனை எண்ணித் தவமிருந்து அகத்தியர் அனைத்துக் கலை ஞானங்களும் கைவரப் பெற்றார் என்பது பழனித் தல புராணக் குறிப்புகளுள் ஒன்று.

இவர் சூரியனிடமிருந்து தமிழ்க்கற்றார் என்ற ஒரு குறிப்பும் காணப்படுகிறது.

பிரமதேவனுக்கு உருப்பசி வயிற்றில் பிறந்தவர் அகத்தியர் என்கிறது காவிரிப்புராணம்.

இந்திரன் மகன் சயந்தனையும், உருப்பசியையும் பூமியில் போய்ப் பிறக்க அகத்தியர் சாபமிட்டார் என்கிறது சிலப்பதிகாரம்.

அகத்தியர் வண்டு உருக் கொண்டு, பல மலர்களின் தேனை எடுத்துச் சிவபூசைசெய்தார். அதனால் திருஈங்கோய் மலை என்ற தலம் உருவாயிற்று என்கிறது திருச்செங்கோட்டுத்தலபுராணம்.

இவர் அரம்பை என்பாளின் சாபத்தைத் தம் பார்வையால் போக்கியவர் என்பது அவிநாசித் தலபுராணப் பதிவுகளுள் ஒன்று.

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்ற மன்னன் ஆட்சிக்காலத்தில், காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு விழா எடுத்தவர் அகத்தியரே என்கிறது மணிமேகலை.

அகத்தியரின் மாணாக்கர் பலர்.

அவர்கள் 1. திரணதூமாக்கினி (தொல்காப்பியர்), 2. அதங்கோட்டாசான், 3. துராலிங்கன், 4. செம்பூட்சேய், 5. வையாபிகன் 6. வாய்ப்பியன், 7. காக்கைப்பாடினியார் (நச்செள்ளையார்), 8. நற்றத்தன், 9. வாமநன் என்போர்.

அகத்தியருக்கு, கும்பமுனி, குறுமுனி, கலசயோகி என்ற பல பெயர்கள் உண்டு.

இவர் செய்த மருத்துவ நூல்கள் பலவாகும்.

1. பெருந்திரட்டு, 2. ஆயுள் வேத பாஷ்யம், 3. விதிநூல், 4. மூவகைக் காண்டம், 5. வைத்திய சிந்தாமணி, 6. செந்தூரம் 300, 7. மணி 4000, 8. சிவசாலம், 9. சத்தி சாலம், 10. சண்முக சாலம், 11. வைத்தியக் கண்ணாடி, 12. வைத்ய ரத்நாகரம், 13. வைத்தியம் 1500, 14. வைத்தியம் 1600, 15. கர்மவியாபகம், 16. கரிசில் பஸ்மம் 200, 17. தண்டகம், 18. பட்சணி, 19. நாடி என்பன. இவற்றுள் பல கிடைக்கப் பெற்றுள்ளன. சில பல்வேறு அமைப்புகளால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. விரிவான நூல் ஆய்வுகள் இதுகாறும் நடந்ததாகத் தெரியவில்லை.

''வைத்திய சம்ஹிதை'' என்ற வடமொழி நூல் ஒன்றும் அகத்தியரால் செய்யப்பட்டுள்ளது.

'அகத்தியர்' என்ற சப்தத்திற்கு (ஒலி) விந்திய மலையை அடக்கியவர் என்பது பொருள்.

அகத்தியர் குமாரர் இத்மவாகு என்பார்.

இவரது சீடர் அக்னி வேச்யர் என்பவர்

அகத்தியருக்குச் செல்வம் வழங்கியவர்கள் சுருதர்வணன், பிரத்னச்வன், திரிசதஸ் என்போர்.

அகத்தியர் வரலாறு குறித்த மேலும் பல தகவல்கள் அபிதான சிந்தாமணியிலும், இலங்கை அரசின் இந்து சமயக் கலாச்சாரத் திணைக்களம் வெளியிட்டுள்ள இந்து சமயக் கலைக் களஞ்சியத்திலும் காணப்படுகின்றன.


அகத்தியர் நூல்கள் குறித்த ஆய்வையும், அவர் பாடல்களின் நுட்பங்களையும் தொடர்ந்து அடுத்தடுத்த இதழ்களில் காணலாம்.

கவிச்சக்ரவர்த்தி கம்பன் படைத்த இராம காதையில் அகத்தியர் குறித்து வரும் ஒரு அழகிய பாடலோடு அகத்தியர் வாழ்வு குறித்த பகுதியை நிறைவுக்குக் கொண்டு வரலாம்.

''நின்றவனை வந்த நெடியோன்
அடி பணிந்தான்
அன்று அவனும் அன்பொடு தழீஇ
அழுத கண்ணால்
நன்று வரவு என்று பல
நல்உரை பகர்ந்தான்
என்றும் உள தென்தமிழ் இயம்பி
இசைகொண்டான்''

(அகத்தியப்படலம் - 47)

- தொடரும்



# அருள்மிகு சுந்தர மகாலிங்க சுவாமி திருக்கோயில்

## சதுரகிரி, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்

பதினெண் சித்தர்களும் தவம் செய்த சிறப்புத் தலமான மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சதுரகிரி அருள்மிகு சுந்தர மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் 24.7.2006 அன்று ஆடி அமாவாசைத் திருவிழா மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளது. பெருந்திரளான பக்த கோடிகள் இந்நன்னாளில் திருக்கோயிலுக்கு வருகை தந்து சுயம்புவாக எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு சுந்தர மகாலிங்கத்தை தரிசித்துச் செல்வார்கள்.

இத்திருத்தலம் கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரத்தில் சதுரகிரி மலையில் அமையப்பெற்றுள்ளது.

அனைவரும் வருகை தந்து இறைவன் அருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

★★★

# இறைவனே மிகப் பெரியவன்

டி.சந்திரசேகரன் இ.ஆ.ப
மாநில தேர்தல் ஆணையர்

விநாயகருக்குப் பேதம் கிடையாது. எந்த ஜாதியினர் வசிக்கும் எந்தத் தெருவிலும் ஒரு குடிசையில் விநாயகர் இருக்கிறார். அவர் வாயிலிருந்து நான்கு வேதங்கள் பொழிந்து கொண்டிருக்கின்றனவாம். ஆகையால் ''மறை மொழி நால்வாயானை'' என்றார்.

நாம் பஜனை செய்யும் பொழுது நம் கண்ணில் படாமல் மறைந்திருந்து சிலர் பஜனையைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனராம். அவர்கள் யாவர்?

''அத்திமுகத்தோன் ஒருபால்
இளையோன் ஆறுமுகத்தோன் ஒருபால்
ஆணொடு பெண்ணானாள் ஒருபால்
அரவு அரக்கசைத்தான் ஒருபால்
அரவின்மிசைநடித்தோன் ஒருபால்
திருப்புகழ் இசைத்தோர் எப்பாலுமாக
எனக்கே உகந்தளித்தான்
திருப்போரூர் நின்ற சரவணபவனே''

இவர்களனைவரும் கேட்டுக் கொண்டு இருக்கின்றனராம்.

முருகனை முழுதுமலாப் பொருள் தரும்படி வேண்டுகிறார் அருணகிரியார். முழுதுமலாப் பொருள் என்றால் என்ன? முழுமையாகவும், இல்லாததாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பொருள் ஞானமே.

எந்தப் பொருளானது பங்கு பங்குகளாக பகுக்கப்படாததோ, எந்தப் பொருளானது பாகமே முழுமையாகவும், முழுமையே பாகமாகவும் கருதப்படுகின்றதோ, எங்கும் பூரணமாய் நிறைந்து உள்ளதோ, அந்தப் பொருளை வேதங்கள் உபதேசிக்கின்றன.

கந்தரனுபூதியில் ஐம்பத்தோராவது பாட்டில் முழுதுமாய் நிற்கும் பொருளைப் பற்றி கூறியுள்ளார். காணப்படும் எல்லாப் பொருள்களும் அந்த முழுப்பொருளில் அடக்கம். அப்பொருளும் ஒன்றேதான். அதிலும் இதிலும் தனித்தனியாய்க் காணப்பட்ட எல்லாவற்றிலும் முழுப்பொருள் நிறைந்திருப்பது அல்லாமல், காணப்பட்ட பல பொருள்களில் ஒவ்வொன்றிலும் முழுப்பொருள் இல்லை. ஆதலால் எங்கும் நிறைந்த பொருள் முழுப் பொருளாகும். அம் முழுப்பொருள் தனித்தனியாகப் பல பொருள்களிலும், தனித்தனியே இல்லாத இலாப்பொருள் யாவற்றிலும் ஒன்றாகவே நிறைந்து உள்ள முழுப் பொருளாகும். ஆகவே, வேதங்கள் கூறுகின்ற ஏகமான தெய்வப் பொருளே முழுதுமான பொருள்; அதுவே இலாப்பொருள். இலாப்பொருளைப் பற்றிக் கந்தரனுபூதியில்

''உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்ற அது''

என்று கூறப்பட்டுள்ளது.

இந்த இலாப் பொருளைத்தான் வேதங்கள் நேதி என்று கூறும். எங்கும் நிறைந்த முழுப் பொருளை 'ஓம் தத்ஸத்' என்று கூறும்.

உலகத்தில் நாம் பார்க்கும் உருவெல்லாம் முருகனுடையதே. அருவும் அவனே. பிறக்கும் முன் அருவாயும் பிறந்தபின் உருவாயும் இருக்கிறானாம். மணியாயும் மணியின் ஒளியாயும் இருக்கிறான். கருவாயிருக்கிறான் என்றார். கருவுள் தட்டுகிறதே அதற்கு உயிர் எங்கிருந்து வருகிறது? கருவாயும் அதற்கு உயிராயும் இருப்பவன் முருகனே. கதியாயும், விதியாயும் அவனே இருக்கிறான்.

உலகத்தில் நான் அவதாரம் செய்து விட்டேன். முருகாவென்று சொல். விதி மாண்டுவிட்டது. கதி வந்து விட்டது. இனி அழுகை கிடையாது என்றானாம் முருகன்.

கனிந்த மனமுடைய அகலிகை, பாவத்தினால் கல் மனமுடையவளானாள். மனம் கல்லாகவே உருவமும் கல்லாயிற்று. நாம் கல்லாயிருக்கக் கூடாது. கனிந்த மனமடைந்து அக்கல்லாக ஆக வேண்டும். கல்லான அகலிகை இராமனுடைய பாததூளி பட்டதும் பாவம் நீங்கி கல்மனம் கனிந்து அகலிகையானாள்.

மற்ற இடங்களில் கட்டி வந்தால் ஆபரேஷன் செய்யலாம். இதயம்அன்பின் உணர்ச்சியே இல்லாமல் கல்லாய் விட்டால் ஆபரேஷன் செய்வது கடினம்.

சில கட்டிப் பொருள்கள் இதயத்தில் சேர்ந்தால் அது கட்டியாய்விடும். பித்தப்பை (Blader, Gallblader) போன்ற அவயங்களில் கல் ஏற்படுகிறது. அதை டாக்டர்கள் ஆபரேஷன் செய்து ஒழித்து விடுகின்றனர்.

ஆனால், இதயம் கல்லாய் விட்டால் அதை ஆபரேஷன் செய்து எடுக்க எந்த டாக்டராலும் முடியாது.

பவரோக வைத்தியநாதனால்தான் கல்லான இதயத்தைக் கரைக்க முடியும்.

மாணிக்கவாசகருக்கு இதயத்தில் கட்டி வந்து விட்டதாம். அவர் சிவாயநம என்று சொல்லிக் கொண்டிருந்தாராம். உடல் முழுவதும் திருநீறு பூசி டாக்டர் ஒருவர் வந்தாராம். பரமசிவனோ என்று நினைத்தாராம். வந்தவர் மாணிக்கவாசகர் அருகில் வந்தார். ''ஏனப்பா என்னை அழைத்தாய்? உனக்கென்ன வேண்டும்?'' என்று கேட்டாராம்.

மாணிக்கவாசகர் ''என் இதயம் கட்டியாய் விட்டது. அதைக் கரைக்க வேண்டும். வழி தெரியாமல் சிவசிவா என்றிருக்கிறேன்'' என்றார்.

வந்தவர் ''கவலைப்படாதே. நான் ஆபரேஷன் செய்து கரைத்து விடுகிறேன். ஆனால் அது மறுபடியும் வராத வழி செய்ய வேண்டும். நீ'சிவாய' என்று சொல்லுவதுடன் மற்றவரையும் சொல்லச் செய். மறுபடியும் கட்டி வராது'' என்றார்.

வந்தவர் பெரிய டாக்டராம். வல்லாளனாம் ஆபரேஷன் செய்வதற்காக குளோரபார்ம் (மயக்க மருந்து) கொடுப்பதற்குச் சித்தர்களது பாஷையில் 'பிச்சேற்றுவது' என்று பெயர்.

''நான் உனக்கு என் பிச்சேற்றி விடுகிறேன். 'சிவாய' என்று சொல்லிக் கொண்டிரு'' என்றார். ''ஓம் நமசிவாய'' என்ற நாமத்தை மாணிக்கவாசகரது நாவிலேற்றிவிட்டார். குளோரபார்ம் என்னும் மயக்க மருந்தை மூக்கிலேற்றுவார்கள். நாமமாகிய மருந்தை நாக்கிலேதான் ஏற்ற வேண்டும். 'சிவாய' என்னும் நாமத்தில் லயித்தார் மாணிக்கவாசகர். பிச்சேறி... விட்டது. சிவத் தியானத்தில் தன்னை மறந்தார். உலகை மறந்தார். அச்சமயம் பார்த்து இதயத்தில் புகுந்தார், வைத்தியநாதராகிய பரமசிவன்.

இதயத்திலுள்ள கட்டியை வெளியிலெடுத்து அறியவில்லை. தன் கையினால் நன்றாகப் பிசைந்தாராம். கல்லின் தன்மை நீங்கிக் கனிந்து விட்டதாம். அதைத் தன் கருணை வெள்ளத்தில் அழுத்திக் கழுவினார். மறுபடியும் அதை இருந்த இடத்திலேயே வைத்து விட்டார். இந்த அனுபவத்தை மாணிக்கவாசகர்.

''கல்லாம் மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை''

என்ற பாட்டால் விளக்கியுள்ளார்

பிறகு மாணிக்கவாசகர் இதயத்தில் கல் கிடையாதாம். சிவ கருணை தானிருக்கிறதாம்.

மிகச் சிறிய அளவுள்ள மருந்தை அடக்கி வைத்திருக்கும் அணுகுண்டு வெடித்தால், அந்தச் சத்தம் வெகு தூரம் வரையில் பரவித் திடுக்கிடச் செய்கிறது. அவ்வாறிருக்கப் பதினாலு உலகங்களையும் தன்னுள் வைத்துக் காப்பாற்றும் சிவாயவெனும் சொல்லின் சத்தம் எத்தனை மகிமையுள்ளதாயும் பெரிதாயுமிருக்கும் என்பது சொல்லாமலே விளங்குமல்லவா?

அந்தச் சமயத்தில் 'ம' என்னும் அகங்காரம் கீழே விழுந்து விட்டதாம். ஆணவம் என்னவாயிற்று? செத்தே போய்விட்டதாம். விழுந்து போனது அவம் அதனால் என்னவாயிற்று? ஆயது சிவமாம். கீழே விழுந்து செத்தது அவம். எழுப்பியது சிவம். அவம் போயிற்று. சிவம் ஆயிற்று.

அவத்தைக் கீழே தள்ளாமல் இருந்தால் என்ன ஆவோம் தெரியுமா ? நாமே மிகக் கீழான அவமாய் விடுவோம். இது பெருத்த அவமானமல்லவா? ஆதலால், அவத்தைக் கீழே தள்ளு! சிவமாய்விடு!!

''அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழலும் அடியேனை அஞ்சலென-வரவேணும்'' என்றார் அருணகிரியார்.

''அறிவாகமும் பெருக இடரானதும் தொலைய அருள் ஞான இன்பமது புரிவாயே'' என்று வேண்டுகிறார்.

''அறிவும் பெருகி இடர் அழிவதற்காக சிவனார் மனம் குளிர அவர் இரு செவிகளிலும் உரைத்த உபதேசமந்திரமாகிய அருள் ஞான இன்பத்தை முருகா ! எனக்குத் தா'' என்று கேட்டார்.

அப்படியே கொடுத்தானாம் முருகன். என்ன வாயிற்று தெரியுமா? ஆனந்தமாய்ப் பாடியும் ஆடியும் காலம் கழித்தார். அவமற்று சிவம் இப்படித்தானிருக்கும்.

சிவமென்ற ஜோதியுணர்கின்ற வாழ்வே

சிவமாம். வேதம் ''சிவம் சிவகரம் சாந்தம் சிவாத்மானம் சிவோத்தமம் சிவமார்க்க ப்ரணேதாரம் ப்ரணதோஸ்மி சதா சிவம்'' என்றது.

சிவம் என்பது கருணை வடிவம். ''கற்பனை கடந்த ஜோதி கருணையே வடிவமாகி'' என்றார் மாணிக்கவாசகர்.

தன் அளவற்ற கருணையினாலேயே சிவன் பிச்சையெடுத்துக் கொண்டு திரிகிறாராம். குழந்தைகளைப் பெற்று விட்டார். தனது ஐசுவரியங்களை எல்லாம் கொடுத்து விட்டார். ஆனால், அக்குழந்தைகளோ கொடுத்தவரை நினைப்பதே இல்லை. வேண்டாதவற்றை நினைத்து எங்கெங்கோ ஓடிக் கொண்டிருக்கிறார்களாம்.

தன் குழந்தைகள் தன்னை நினைக்காமல் வீணாக அலைந்து துன்புறுகிறார்களே என்ற கருணையினால், பிச்சைக்காரனாகச் சென்றாராம் அவர்களிடம்.

குழந்தைகளே ! உங்களைப் பெற்றேன். வேண்டியதை எல்லாம் உங்களுக்குக் கொடுத்து விட்டேன். உங்களுக்கு வேண்டாத ஒன்றால் நீங்கள் துன்புறுகிறீர்கள். அதை மட்டும் எனக்குக் கொடுத்து விடுங்கள். அது என்னுடையது. இது வரையில் நீங்களாகக் கொடுத்து விடுவீர்கள் என்று நினைத்து இருந்தேன். கொடுக்காததால் நானே உங்கள் வாசலில் பிச்சைக்காரனாய் வந்து யாசிக்கிறேன். அதுதான் உங்கள் மனம். மனத்தை என்னிடம் கொடுத்து விட்டீர்களானால் நன்றி மறந்த பாவம் உங்களைச் சாராது. பிகுக பொருளை எப்படி வேண்டுமானாலும் அனுபவித்துக் கொள்ளுங்கள் என்றாராம். இதை ஜீவராசிகள் கேட்டால்தானே. அவர்கள்தான் அவத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்களே!

இவருடைய எளிய நிலை அன்னையாகிய பராசக்திக்குத் தாங்கவில்லையாம். ஓடி வந்தாளாம்.

''ஏன் இப்படி அலைகிறீர்கள்? என் குழந்தைகளின் மனம் என்னிடத்தில் அல்லவா இருக்கிறது. என் முந்தானையால் அம் மனங்களைச் சேர்க்கும் சக்தியை எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இதோ அவற்றைக் கொடுத்து விட்டேன் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று, ஜீவராசிகளின் மனங்களுடன் தன் மனத்தையும் சேர்த்துக் கபாலத்தில் போட்டு விட்டாளாம். இனிப் பிச்சைஎடுக்கக் கூடாதென்று கயிலாயத்திற்கழைத்துச் சென்று விட்டாளாம்.

''இடுபலி கொடுதிரி இரவலர் இடர்கெட
விடுமனகரதல ஏகாம்பரை இந்திரை''

என்ற அடிகளால் அருணகிரியார் இதைக் குறிப்பிடுகிறார்.

பரமசிவன் எட்டுத் திசைகளையும் வேஷ்டியாக உடுத்திக் கொண்டு நடனமாடினாராம். அந்த நடனக் கோலத்தை அப்பர் கண்டாராம்.

''குனிந்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே'' என்றார்.

இறைவன் நடனமாடிக் கொண்டிருக்கிறாராம். அவரைக் காண வருகின்றனர் அடியார்கள். அவர்களுடன் புருவத்தை வளைத்துப் பேசி உபசரித்து விடுகிறாராம்.

தன் பக்தர்களைக் கண்ட மகிழ்ச்சியினால், கொவ்வைக்கனி போன்ற வாயில் சிரிப்பு குமிழியிட்டு வருகிறதாம். உலகத்தையே குளிரச் செய்யும் கங்கையாகிய கருணைப் பிரவாகம், தலையிலிருந்து சடையின் மூலமாய் ஜீவராசி களுக்குப் பொழிந்து கொண்டிருக்கிறதாம்.

பால் போன்ற வெண்ணீற்றைத் திருமேனியில் பூசிக் கொண்டிருக்கிறாராம். விஷத்தை உண்டாரே, அதையாவது மறைக்கத் தெரிந்ததா? கழுத்திலேயே தங்கி இருக்கிறது.

ஒரு பாதத்தை மேலே தூக்கி, மற்றொரு பாதத்தைக் கீழே ஊன்றிய வண்ணம் ஆடிக் கொண்டேயிருக்கிறாராம்.

''நீஇப்படியே ஆடிக்கொண்டேயிரு ! நான் உன் திருவடியின் கீழிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் காரைக்கால் அம்மையார்.

பக்தர்களும் பகவானும் கலக்கும் பாவங்கள் பலவுண்டு. வள்ளியும் கந்தனும், கோபிகளும் கண்ணனும், பகவானும் பக்தர்களும் என்று பற்பல வகைகளில் பகவானுடன் பக்தர்கள் கலக்கின்றனர். அவ்வாறு கலந்த அனுபவத்தின் விமரிசனமே பாடல்களாக வெளிவருகின்றன.

# அட்ட வீரட்டத் தலங்கள்

பேராசிரியர் பெ.பாண்டியன் M.A.,M.phill., சின்னமனூர்

அறநூல்களில் சொல்லப்பட்ட நல்வினைகளைச் செய்யாது ஒழுகுகின்றவர்களை இறைவன் தண்டித்துத் திருத்துகிறான். உயிர்கள் திருந்தி உய்ய வேண்டும் என்னும் பெருங்கருணையின் காரணமாக இறைவன் இவ்வாறு செய்கின்றான். இது மறக்கருணை எனப்படும். இறைவன் இவ்வாறு வெளிப்படுத்திய மறக்கருணைச் செயல்கள் எட்டாகும். சிவபெருமான் செய்த வீரச்செயல்களின் திருத்தலங்களை வீரட்டானங்கள் என்பர். (வீரம்+தானம்= வீரட்டானம். வீரம் விளைந்த இடம்) இத்தலங்களையும் அங்கு நடைபெற்ற வீரச்செயல்களையும் பின்வரும் பாடல் விளக்கி நிற்கிறது.

''பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி, மா வழூவூர்
காமன் குறுக்கை, யமன் கடவூர், இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடியதன் சேவகமே''.

இந்த அட்ட வீரட்டானங்களில், திருவதிகை திருக்கோயிலின் பெருமைகளும் சிறப்புகளும் இக்கட்டுரையில் விளக்கம் பெற்றுள்ளன.


---

# திருஅதிகை அருள்மிகு வீரட்டானேஸ்வரர் திருக்கோயில்

திருத்தல உலா - 2

ஸ்ரீ வீரட்டானேஸ்வரர் திருவடிகள் போற்றி போற்றி!
ஸ்ரீ பெரியநாயகி திருவடிகள் போற்றி போற்றி!

கடலூர் மாவட்டம், விழுப்புரம் - கடலூர் ரயில் மார்க்கத்தில் பண்ருட்டியில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருவதிகை என்னும் திருத்தலம் ஆன்மீகப் பெரியவர் மனவாசங்கடந்த முனிவரை ஈன்ற பெருமை கொண்டுள்ளதலம்.



தமிழகத்திலேயே முதன் முதலாக தேவாரப்பாடல் பதிகத்தை (கூற்றாயினவாறு) திருநாவுக்கரசரால் பாடப் பெற்றிருப்பது இத்தலத்தின் இணையில்லாத பெருமையாகும்.

இராஜ இராஜ சோழன் கட்டிய தஞ்சைபிரகதீசுவரர் ஆலயத்துக்கு முன்பே, பல்லவர்கால ஆட்சிக் காலத்தில் திருவதிகை கோயிலின் விமான நிழல் தரையில் விழாதபடி கணித சாஸ்திர முறையுடன் பல்லவர்களால் கட்டப்பட்டது. இக்கோயிலின் கருவறை, விமானம், அதன் மண்டபம் இவற்றினைத் தவிர மற்ற இடங்கள், கோபுரங்கள் அனைத்தும் பலமுறை பல மன்னர்களின் படையெடுப்பாலும், சமயப் பூசல்களாலும் அழிந்து மறுபடியும் பின் வந்த மன்னர்களால் செப்பனிடப்பட்டவை.

முன் ஒரு காலத்தில் தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் கடுமையான தவங்கள் செய்து பிரம்மாவிடம் பல வரங்களைப் பெற்றார்கள். தங்களை யாராலும் வெல்லவோ. கொல்லவோ முடியாது என்று வரம் வேண்டினர். அதன்படி வரம் பெற்ற அவ்வசுரர்கள் மிகுந்த ஆணவம் கொண்டு தங்கக் கோட்டை, வெள்ளிக் கோட்டை, இரும்புக் கோட்டைகளில் மூன்று அசுரர்களும் ஆட்சி செய்தனர். வரபலம் பெற்ற அவ்வசுரர்கள் அறவழியை விட்டு மறவழியில் சென்றனர். தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் பல கொடிய தீங்குகளைச் செய்தனர். திருமால், நான்முகன், இந்திரன், அக்னி, வாயு, வருணன், பூமி, அஷ்டதிக் பாலகர்கள், நவகிரகங்கள், சூரியன், சந்திரன் என அனைவரும் அவ்வசுரர்களை கண்டு அஞ்சி நடுங்கினர்.

எனவே அவர்கள் அனைவரும் உலக நாயகனான சிவபெருமானைக் காணக் கயிலைக்குச் சென்றனர். அங்கு சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து, வணங்கி, அழுது எம்பெருமானிடம் தாங்கள் அசுரர்களால் படும் துன்பங்களைக் கூறி துயரங்களைப் போக்குமாறு வேண்டினர். அனைத்து உயிர்களுக்கும் அம்மை அப்பனான கருணையே வடிவமான சிவபெருமான் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா?

எனவே, அவர்களது குறைகளைப் போக்க

மனம் இரங்கினார். அதன்படி பூமியைத் தேராகவும், சூரியச் சந்திரர்களை தேர் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம்மாவைத் தேரோட்டியாகவும், மற்ற தேவர்களை எல்லாம் தேருடன் (அதற்கு வைதிகத் தேர் என்று பெயர்) வரச்செய்தார்.

சுவாமி மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், திருமாலை அம்பாகவும், அம்பின் நுனியில் அக்னியையும் வைத்து அந்த வில்லுடன் தேரில் ஏறினார். தேரில் ஏறி சிவபெருமான் வரும்பொழுது வழியில் தேரின் அச்சு முறிந்தது. தேவர்கள் அனைவரும் கூடி என்ன காரணம் என்று ஆராய்ந்தனர். பின்னர், முழுமுதல் கடவுளாகிய விநாயகப் பெருமானை வழிபட மறந்ததால் தடை ஏற்பட்டது என்று உணர்ந்தனர். அதன் பிறகு கணபதி பூஜை செய்து எடுத்த காரியம் குறைவின்றி முடிய வேண்டிக் கொண்டனர். முழுமுதல் கடவுளாகிய பிள்ளையாரும் மகிழ்ந்து அவர்களுக்கு அருள்புரிந்தார்.

சிவபெருமானுடன் தேரில் வந்த அனைத்து தேவர்களும் தங்களால்தான் (தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி) அந்த மூன்று அசுரர்களும் மடியப் போகிறார்கள் என்று மனத்தில் நினைத்தனர். எம்பெருமானுடைய தேர் மூன்று அசுரர்கள் வாழ்ந்த பொன், வெள்ளி, இரும்பு ஆகிய கோட்டையின் முன் வந்து நின்றது. மூன்று அசுரர்களும் சிவபெருமானுடன் போர் புரிய வெளியில் வந்தனர். அவர்களது கருத்தை அறிந்த சிவபெருமான் வில், அம்பு எவற்றையும் பயன்படுத்தவில்லை. அசுரர்களைப் பார்த்து சற்றே சிரித்தார். அவ்வளவுதான் உலகமே நடுங்கும்படியாக பெரியத் தீப்பிழம்பு புறப்பட்டு ஒரு நொடியில் மூன்று கோட்டைகளையும் அழித்து சாம்பலாக்கியது. தங்களது உதவி இல்லாமலே சிவபெருமான் சம்ஹாரம் செய்ததை தேவர்கள் உணர்ந்து மிகவும் வெட்கினர். ஒரே சமயத்தில் சுவாமி தேவர்கள், அசுரர்கள் இருவரது ஆணவத்தையும் அடக்கினார்.

தாங்கள் செய்த பாவங்களை உணர்ந்த அசுரர்கள் சிவபெருமானிடம் சரணடைந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து தங்களை மன்னித்து அருளும்படி வேண்டிக் கொண்டனர். கருணைக் கடலாகிய சுவாமியும் மன்னித்து இருவரை தனது வாயில் காப்பாளர்களாகவும், ஒருவரை குடமுழா முழக்குபவனாகவும் ஆக்கிக் கொண்டார். மேற்கூறிய புராண வரலாறே ''திரிபுரசம்ஹாரம்'' என்று அழைக்கப்படுகிறது.

சிவபெருமான் எட்டு வீரச்செயல்களைப் புரிந்தார். அவற்றுள் அதிகப்படியானதும், மிகச் சிறப்பானதும் ஆன திரிபுரசம்ஹாரமே என்பதால் இந்த வரலாறு நடைபெற்ற இடம் திருஅதிகை என்று அழைக்கப்படுகிறது.

தேவாசுர யுத்தம் பதினெட்டு ஆண்டுகள் நடைபெற்றது.

இராம, இராவண யுத்தம் பதினெட்டு மாதங்கள் நடைபெற்றது.

மஹாபாரத யுத்தம் பதினெட்டு நாட்கள் நடைபெற்றது.

ஆனால், திரிபுரசம்ஹாரமோ எந்த ஆயுதமும் இன்றி ஒரு அழகான சிரிப்பினாலேயே ஒரே நொடியில் நடைபெற்றது. அவரது பெருமையை இன்னும் கூற வேண்டுமோ?



அடுத்ததாக வேறொரு வரலாற்று நிகழ்ச்சியையும் காண்போம்.


சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு திருஅதிகை நகரின் மேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் திருவாமூர் என்னும் ஊர் உள்ளது. அங்கு புகழனார், மாதினியார் என்னும் பெற்றோருக்கு திலகவதியார், மருள்நீக்கியார் என்ற இருவர் பிறந்தனர். திலகவதியாருக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட பல்லவ மன்னனின் படைத்தளபதி போரில் உயிர்துறந்தார். தனது மகளின் திருமணம் தடைபட்டதால் புகழனார் மிகவும் சொல்ல முடியாத துயர் அடைந்தார். சிறிது நாளில் உயிர் துறந்தார். கணவன் சென்ற வழியிலேயே மாதினியாரும் இவ்வுலகை விட்டு நீங்கினார்.

திலகவதியாரும், மருள்நீக்கியாரும் செய்வது அறியாது திகைத்தனர். இளமையில் பட்ட கடும் துன்பங்களால் மனம் வெறுப்புற்ற மருள்நீக்கியார் வேற்று சமயமாகிய சமண சமயத்தில் சேர்ந்து திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமண மதத்தினருடன் வாழ்ந்து வந்தார். தம்பி வேறு மதத்தில் சேர்ந்ததை அறிந்த திலகவதியார் திருஅதிகை வந்தடைந்து வீரட்டானேஸ்வரருக்கு நாள்தோறும் பெருக்கி கோலமிடுதல், மெழுகுதல், நந்தவனம் அமைத்து மாலை சூட்டி சுவாமிக்கு தொண்டுகள் செய்து வந்தார். எப்படியாவது தனது தம்பியை சைவ சமயத்துக்கு மீண்டும் திரும்புவதற்கு இறைவனிடம் நாள்தோறும் பிரார்த்தனை செய்து வந்தார்.

அவரது வேண்டுகோளுக்கு இரங்கி வீரட்டேஸ்வரர் அவரது கனவில் ஒரு நாள் தோன்றினார். அதன்படி உனது தம்பி முன்னமே வாகீசன் என்னும் திருப்பெயருடன் கயிலையில் நமக்கு தொண்டு செய்து வந்தான். அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வோம் ! கவலை விடுக, என்றார். கனவினின்று விழித்த திலகவதியார் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

சில நாட்கள் கழிந்தபின் திருப்பாதிரிப்புலியூரில் இருந்த தருமசேனருக்கு தீராத வயிற்று வலி வந்தது. சமணர்கள் அவரது வயிற்று வலியை நீக்க எவ்வளவோ முயன்றனர். ஆனால் முன்னைவிட மேன்மேலும் வலி அதிகமானது. ஒரு நாள் அதிகாலையில் திருஅதிகை அடைந்து திலகவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து தமது நோயைப் போக்கும்படி கதறினார். திலகவதியாரும் மனமிரங்கி வீரட்டானேஸ்வரர் சன்னதிக்கு தன் தம்பியை அழைத்துச் சென்று ஐந்தெழுத்தை ஓதி ''திருவாளன் திருநீறு அளித்தார்''. அந்த திருநீற்றை வாங்கி நெற்றியில் பூசி திருவாயில் போட்டுக் கொண்டார். ஆஹா ! என்ன ஆச்சர்யம் கதிரவனைக் கண்ட பனிபோல் அவரது வயிற்று வலி நீங்கி விட்டது.

வீரட்டானேஸ்வரரை வணங்கி, ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' என்னும் திருப்பதிகம் பாடினார். அதனால் மனமகிழ்ந்த கண்ணுதற் பெருமான் ''நாவுக்கரசு என்று நின் நன்நாமம் நயப்புற மன்னுக'' என்று பட்டம் கொடுத்தார்.



அது முதல் சமண சமயத்தில் நீங்கி சைவத்தையே உயிர் மூச்சாகக் கொண்டு உழவாரம் செய்து வந்தார். திலகவதியாரும் இறுதி மூச்சு வரை சுமார் ஐம்பது ஆண்டுகள் திருஅதிகை பெருமானுக்கு தொண்டு செய்து இறைவனடி சேர்ந்தார்.

**திருக்கோயிலின் சிறப்புக்கள்:**

1. முதன் முதலில் தேர் ஏற்பட்ட வரலாறு இதுவே ஆகும்.

2. அட்ட வீரட்டத் தலங்களில் சிறப்புடையது.

3. தேவாரம் முதன்முதல் பாடப்பட்ட தலம் இதுவே ஆகும்.

4. சுவாமி வீரட்டானேஸ்வரர் பதினாறு பட்டைகளுடன் மிகப்பெரிய அளவில் காட்சி அளிக்கிறார்.

5. இத்திருக்கோயிலின் கர்ப்பகிரக விமானத்தைப் பார்த்து இராஜ இராஜ சோழன் பிற்காலத்தில் தஞ்சையில் பெரிய கோயிலை கட்டினான்.

6. சித்திரையில் அப்பர் பெருமானுக்கு பத்து நாட்கள் சிறப்பாக விழா நடைபெறுகிறது.

7. வைகாசியில் பிரம்ம உற்சவம் பத்து நாட்கள், விசாகத்தில் தேர் திருவிழாவும், திரிபுர சம்ஹாரமும் நடைபெறுகிறது.

8. உழவாரம் முதன்முதலில் திருநாவுக்கரசரால் இங்குதான் செய்யப் பெற்றது.

9. பன்னிரெண்டு திருமுறைகளிலும் திரிபுர சம்ஹார நிகழ்ச்சியை பற்றியே அதிகமாக பாடப் பட்டுள்ளது.

10. இறைவன் தேரில் வந்ததால் இத்திருக்கோயிலின் அமைப்பும் தேர் வடிவில் உள்ளது.

11. நாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற ஸ்தலமாகும்.

12. இந்த இறைவனை வழிபடுவோர்க்கு ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கும்.

13. அம்பாள் சன்னதி சுவாமிக்கு வலப்புறம் உள்ளது தனிச்சிறப்பாகும். இதனால் திருமணம் ஆகாதவர்கள் இங்கு வந்து பிரார்த்தனை செய்தால் திருமணம் உடனடியாக நடக்கும்.

14. தீராத வயிற்றுவலி இத்திருக்கோயிலில் திருநீறும், சூலைத் தீர்த்தமும் உட்கொண்டால் உடனடியாக தீர்ந்துவிடும்.

15. குழந்தை பேறு இல்லாதவர்கள் இறைவனை வழிபட்டு அபிஷேகம் செய்து அந்தப் பாலை உட்கொண்டால் உடனே குழந்தை பேறு உண்டாகும்.

எனவே திருஅதிகை வீரட்டானேஸ்வரர் திருக்கோயிலுக்கு வந்து வழிபடுவோர்க்கு கயிலைக்கு சென்ற பலன் கிடைக்கும் என்பது உறுதி.

''வில்லால் வியன் அரனம்எய்தாய் போற்றி!
வீரட்டம் காதல் விமலா போற்றி!''



# தீராத வினைகள்



சென்னை, பிராட்வே பஸ் நிலையத்தில் இருந்து 25 கி.மீ. தொலைவிலும் பல்லாவரத்தில் இருந்து 4 கி.மீ.. தொலைவிலும் அமைந்துள்ளது திருநீர்மலை. இவ்வூரை வடமொழியில் தோயாத்ரி என அழைப்பர். தோயாத்ரி என்றால் நீர்மலை எனப்பொருள் கூறுவர். அடைமொழி சேர்ந்த நீர்மலை ''திருநீர்மலை'' என அழைக்கப் படுகிறது.

ஊரின் முக்கியமான மலையும், மலையடி வாரத்தில் திருக்குளமும் இவைகளைச் சுற்றி வயலும் ஏரியும் அமைந்து உள்ளன.

**திருக்கோயில்**

மலையிலும், கீழேயும் இரண்டு திருக்கோயில்கள் அமைந்துள்ளன. வேண்டியவர்களுக்கு வேண்டியதை அருளும் திருமால் இங்கு நான்கு நிலைகளில் காட்சி தருகிறார். 3 அவதாரங்களில் அருள் பாலிக்கிறார். இத்திருத்தலம் 108 வைணவத் திருப்பதிகளில் பாடப்பெற்ற ஒன்றாகும்.

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில் இங்கு இருக்கும் பெருமாள் திருவாலியில் இருந்த கோலத்தையும் திருக்குடந்தையில் கிடந்த திருக்கோலத்தையும் திருக்கோவிலூரில் நடந்த திருக்கோலத்தையும் ஒப்பிட்டுப் பாடுகிறார்.

முதல் ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வாரும் இத்திருக்கோயில் பெருமாள் அழகை வியந்து பாடுகிறார்.

**இறைவன்**

கீழ்கோயிலில் ஸ்ரீ நீர்வண்ணப் பெருமாள் வால்மீகி மகரிஷிக்குக் காட்சி தரும் நிலையில் உள்ளார்.

மலைக்கோயிலில் ரங்கநாதர், திரிவிக்கிரமர் சாந்த நரசிம்மர் ஆகியோர் அருள் பாலிக்கின்றனர்.

நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் ஆகிய நான்கு நிலைகளில் இங்கே இறைவன் காட்சிதருகிறார்.

**நின்றான்**

''நின்றான்'' என்ற திருக்கோலத்தில் நீர்



# தீர்க்கும் திருநீர்மலை





வண்ணராய் காட்சி தருகிறார் ஸ்ரீராமர். வால்மீகி ராமாயணத்தை எழுதி முடித்து ''ராமா உன் ராம காவியத்தை'' எழுதி முடித்து விட்டேன் எனக்கு அருள் தந்து வரம் பாலிக்க வேண்டும் எனக் கேட்க, ஸ்ரீராமபிரான் இந்தத் தலத்தில் நீர்வண்ணராய் காட்சி தந்ததாக செவிவழிச் செய்திகள் செப்புகின்றன.

நீர் வண்ணப் பெருமாளின் நாச்சியாராக ''அணிமா மலர்த் தாயார்'' அமர்ந்த அழகுடன் அருளுகிறார். திருமங்கையாழ்வார் ஸ்ரீ அணிமா மலர் மங்கைத் தாயாரையும் மங்களா ஸாசனம் செய்துள்ளார். இது இத்தலத்தின் சிறப்பு அம்சமாகும்.

**நடந்தான்**

ஈரடியால் மூவுலகும் நடந்து, மூன்றாவது அடியை எங்கே வைப்பது எனக் கேட்கும் பாவனையில் திருவிக்கிரம அவதார நிலையில் ''நடந்த'' வராககாட்சி தருகிறார்.

**இருந்தான்**

நாராயணன் எங்கே எனக் கேட்ட இரணியனுக்கு, நான் இங்கே எனத் தூணில் இருந்து வெளிவந்து, பயந்த பிரகலாதன் வேண்டுதலை ஏற்று அமைதி பெற்ற கோலத்தில் சிங்கத்தலையும், மனித உடலுடன் இருந்த திருக்கோலத்தில் சாந்த நரசிம்மராகக் காட்சி தருகிறார்.


மேற்படி கோலம் கண்டு பயந்த நிலையில் இருந்த பிரகலாதனுக்காக ''பால நரசிம்மராக''வும் காட்சி தருகிறார்.

**கிடந்தான்**

ஸ்ரீதேவி பூதேவி அடிவருட அரவத்தின் அணை மீது ''கிடந்த'' திருக்கோலத்தில்







ஸ்ரீரங்க நாதராகக் காட்சி தருகிறார்.

திருவரங்கம் போலவே "ஸ்ரீரங்கநாயகித்" தாயார் தனி சன்னதியில் அமர்ந்து அருள் செய்கிறார்.

திருக்கோயிலில் 10ம் நூற்றாண்டு காலக் கல்வெட்டுகள் உள்ளன. கட்டிட அமைப்பும் அக்காலத்துச் சோழர் காலத்தைச் சார்ந்தே உள்ளது.

எனினும் முதல் ஆழ்வார்களில் ஒருவராகிய பூதத்தாழ்வாராலும் திருமங்கை ஆழ்வாராலும் பாடப்பட்டிருத்தலால் கி.பி. 6ம் நூற்றாண்டிற்கு முன்பே இத்திருக்கோயில் இருந்திருக்க வேண்டும்.

### திருக்குளம்

இத்திருக்கோயிலில் திருக்குளம் 3 ஏக்கர் பரப்பில் அமைந்து நடுவில் நீராழி மண்டபத்துடன் அழகாக உள்ளது.

இத்திருக்குளம் "சுத்த புஷ்கரணி" எனவும் "க்ஷீர புஷ்கரணி" எனவும் "காருண்ய புஷ்கரணி" எனவும், "ஸ்வர்ண புஷ்கரணி" எனவும் வழங்கப்படுகிறது. இப்புஷ்கரணியில் நீராடி இறைவனை வழிபட்டால் நோய் ஒழியும்; நலம் கிடைக்கும்; சித்தம் தெளியும்; சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

### பிரார்த்தனைகள்

இத்திருக்கோயில் ஒரு பிரார்த்தனைதலமாகும்.

குழந்தையில்லாதவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டு சிறுதுணியில் மலையில் உள்ள மரத்தில் கல்கட்டி விட்டுச் சென்று குழந்தை பிறந்ததும் தொட்டில் கட்டிவிட்டு பிரார்த்தனை செலுத்தி விட்டுச் செல்லுகின்றனர்.

குறையுள்ள மற்றும் நோயுற்ற குழந்தைகளுக்கு, பிரார்த்தனையின் பேரில் முடி இறக்குதல், காது குத்துதல் போன்றவையும் செலுத்தப்படுகின்றன.

திருமணமாகாத பெண்கள் தொடர்ந்து ஏழு வாரங்கள் கிரிபிரதட்சணம் வந்து சேவித்தால் தங்களின் திருமணம் கை கூடுவது இத்திருக்கோயிலில் சிறப்பு.

தொழிலில் தொல்லை இருப்போர், பணியில் தொல்லைப்படுவோர் ஆகியோர் இங்கே வந்து இறைவனை வழிபட்டு அல்லல்கள் நீங்கப் பெற்று பலவித உபயங்களைத் திருக்கோயிலுக்குச் செய்து வருகின்றனர்.

தீராத தொல்லைகள் தீர்ந்தோர் பல நலன்களும் பெற்ற பின்னர் தொடர்ந்து இத்திருக் கோயிலுக்கு வருகின்றனர்.

ஸ்ரீதேவி பூதேவி சமேதராக ஸ்ரீ ரங்கநாதர் இருப்பதால் திருமணங்கள் கைகூடும் திருத்தலமாக இது உள்ளது. சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் போன்றவைகளும் இங்கே பிரார்த்தனையின் பேரில் நடைபெறுகின்றன.

திருப்பதி, ஸ்ரீரங்கம், ஒப்பிலியப்பன் திருக்குடந்தை போன்ற அனைத்து வைணவத் தலங்களின் பிரார்த்தனைகளையும் இத்தலத்தில் செலுத்தி நலம் பெறலாம்.

இத்தகைய சிறப்புகள் பெற்ற தீராத வினைகள் தீர்க்கும் திருநீர்மலைப் பெருமானை வணங்கி வாழ்வில் வலம் பெறுவோமாக.


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., உதவி ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்

விருதுநகர் மாவட்டம். தொலைபேசி எண் : 04563-260254

# அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள்
# திருவாடிப்பூர பிரமோற்சவம்

ஆடி மாதம் 5(21.07.2006) முதல் 16 (31.07.2006) வரை

## அழைப்பிதழ்

"இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக
வன்றோ இங்காண்டா ளவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னையிகழ்ந்து
ஆழ்வார் - திருமகளா ராய்."

- சுவாமி மணவாள மாமுனிகள்

மங்களாசாசன மறையுணர் திருவருளுடையீர்!

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி திருப்பாவை பாடியருளிய கோதை என்றும் போற்றப்படும் ஸ்ரீஆண்டாள், கலியுகம் பிறந்து 98-வதாக நிகழ்ந்த நளவருடம் ஆடி மாதம் செவ்வாய்க்கிழமை 8-ஆம் தேதி சுக்ல பட்சம் பஞ்சமி திதி கூடிய பூர நட்சத்திரத்தில் துலா லக்னத்தில் தெய்வீக அழகு பொருந்தியவளாய், துளசிச் செடிக்கு கீழேயுள்ள பாத்தியில் ஸ்ரீபூமிதேவியின் அம்சமாக மஹாலட்சுமியாக அவதரித்தாள்.

இவ்வாறு ஸ்ரீஆண்டாளின் ஜனன வைபவத்தைக் கொண்டாடும் விதமாக ஒவ்வொரு வருடமும் இத்திருக்கோயிலில் பனிரெண்டு நாட்கள் இப்பிரமோற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பூமிப்பிராட்டியாம் ஸ்ரீ ஆண்டாளின் திருஅவதார தினமான ஆடிப்பூர நன்நாளைக் கொண்டாடும் விதமாக ஸ்ரீஆண்டாள் திரு ஆடிப்பூர பெருவிழா, ஸ்ரீவைகாணஸ பகவத் சாஸ்திர முறைப்படி துவஜாரோஹணம் (கொடியேற்றம்) தொடங்கி புஷ்பயாகம் வரை மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது. தினமும் ஆழ்வாரின் அருளிச் செயல்களான நாலாயிர திவ்ய பிரபந்த சேவா காலமும் நடைபெறுகிறது. பக்தர்கள் அனைவரும் இத்திருவிழாவில் கலந்து கொண்டு ஸ்ரீஆண்டாள்- ஸ்ரீ ரெங்கமன்னார் திவ்ய தம்பதிகளின் அருளைப் பெற்று இன்பமுற வேண்டுகிறோம்.

### முக்கிய திருநாட்கள்

| | | |
|---|---|---|
| 1. துவஜாரோஹனம் (கொடியேற்றம்) | .. | 21.07.2006 வெள்ளிக்கிழமை |
| 2. ஐந்தாம் திருநாள் (ஐந்து கெருடசேவை) | .. | 25.07.2006 செவ்வாய்க்கிழமை |
| 3. ஏழாம் திருநாள் - சயன சேவை | .. | 27.07.2006 வியாழக்கிழமை |
| 4. ஒன்பதாம் திருநாள் - ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ ரெங்கமன்னார் திருத்தேரோட்டம் | .. | 29.07.2006 சனிக்கிழமை |

இவண்
செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர்கள்


பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில்

சங்கரன்கோவில்
திருநெல்வேலி மாவட்டம்

## ஆடித்தபசுத் திருவிழா அழைப்பிதழ்



பேரன்புடையீர்,

சிவபெருமானை விட்டுப்பிரியாத அருட்சக்தியாம் உமையம்மை, உலகத்தின் உயிர்களாகிய நாம், சிவன் வேறு விஷ்ணு வேறு என்று பிளவுபடுத்துவது தவறு என்பதை உணர்த்தும் பொருட்டு, திருக்கயிலை மலையில் பரமசிவனிடம் சிவபெருமானே! சங்கர நாராயணமூர்த்தியுடன் பொருந்தியிருக்கும் திருக்கோலத்தைக் காட்டியருள வேண்டும் என்று வேண்டினார். அதற்கு இணங்கி சிவபெருமான் அம்மையை நோக்கி ''பூலோகத்தில் பொதிகை மலைச்சாரலில் உள்ள புன்னை வனத்தலமாகிய பொதிகை மலைச்சாரலில் உள்ள புன்னை வனத்தலமாகிய சங்கரநயினார் கோயில் என்னும் பதியில் தவம் செய்து நீவிரும்பிய திருமேனியை தரிசிக்க'' என்று அருளினார். அதன்படி உமையம்மை தம்மை சூழ்ந்து பசுக்களாகி வந்த தேவ மாதர்களுடன் கோமதியம்மை, ஆவுடையம்மை எனும் காரணப்பெயர்கள் தாங்கி தவமிருந்தார். அம்மையின் தவத்திற்கிணங்க சிவபெருமான் ஆடித்திங்கள் ''உத்திராட'' நன்னாளில் அருள்தரும் கோமதி அம்பிகைக்கு காட்சி கொடுத்தருளினார்.

''தவசுக்காட்சி'' என பக்த கோடிகள் கண்டுகளித்து மகிழும் இத்தகைய சிறப்புமிக்க ''ஆடித்தபசுத்திருவிழா'' நிகழும் ஸ்ரீவிய வருடம் ஆடித்திங்கள் 13ம் நாள் சனிக்கிழமை முதல் ஆடித்திங்கள் 24ம் நாள் புதன்கிழமை முடிய வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

8.8.2006 அன்று மாலை 5.30 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் சிவபெருமான் ஸ்ரீகோமதி அம்பாளுக்கு ஸ்ரீசங்கரநாராயணராகவும் இரவு 11.30 மணிக்கு மேல் 12.30 மணிக்குள் ஸ்ரீசங்கரலிங்க மூர்த்தியாகவும் காட்சி தருகிறார்.

முக்கிய திருநாள் : ஆடித்தபசு 8-8-2006

பக்தகோடிகள் அனைவரும் இத்திருவிழாவிற்கு வருகை தந்து இறையருள் பெற்று சிறக்க வேண்டுகிறோம்.

## திருக்கோயில் கட்டணங்கள்

| | | | |
|---|---|---|---|
| அஷ்டோத்திர அர்ச்சனை | ரூ. 3.00 | வெள்ளி நாகர், தேள் பூரான் ஒவ்வொன்றின் விலை | ரூ. 3.00 |
| திரிசதை | ரூ. 6.00 | குங்குமம் பாக்கெட் 1க்கு | ரூ. 1.00 |
| சகஸ்ரநாமம் | ரூ. 20.00 | அபிஷேக விபூதி பாக்கெட் 1க்கு | ரூ. 1.00 |
| தேங்காய் உடைப்பு | ரூ. 2.00 | புற்றுமண் பாக்கெட் 1க்கு | ரூ. 2.00 |
| நெய் விளக்கு | ரூ. 1.00 | பன்னீர் பாட்டில் 1க்கு | ரூ. 5.00 |
| திருமணக் கட்டணம் | ரூ. 201.00 | தங்கப்பாவாடை கட்டணம் | ரூ. 301.00 |
| துலாபாரக் கட்டணம் | ரூ. 30.00 | அன்னதானக் கட்டளை | ரூ.15,000 |
| தங்கரத உலா கட்டணம் | ரூ. 1,001.00 | | |

இவண்

துணை ஆணையர்/
செயல் அலுவலர்

அறங்காவலர்கள்